பி. நடராஜன்

# சத்திய சரிதை

அல்லது

# சூளுரையாற் சூழ்ந்த கதை

— நா. சிவபாதசுந்தரன்

உ

# சத்திய சரிதை

அல்லது

# சூளுரையாற் சூழ்ந்த கதை

தோல்புரம்,
**புலவர் நா. சிவபாதசுந்தரன்**
அவர்கள் எழுதியது.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

1953

முதற்பதிப்பு: 1953

ஸ்ரீ காந்தா அச்சகம்,
யாழ்ப்பாணம்.

உரிமை ஆசிரியருக்கே.

விலை சதம் 85.

A. Kanagasabapathy.
J.S.C "A"
15.11.'9

உ

# புறவுரை.

கல்வி கற்கும் காலத்தில் யான் படித்த கதைகளில் அரிச்சந்திரன் கதை என் மனத்தை மிகக்கவர்ந்தது. இக் கவர்ச்சிக்குக் காரணம் அரிச்சந்திரனுக்குத் துணைவியாய் அமைந்த சந்திரமதியாரின் உள்ளப்பாங்கேயாம். தத்தம் கொள்கைகளுக்காக மக்கள் எவ்வளவு இன்னல்களையும் தாங்குவார்கள் என்பதை இக்கதை காட்டுகின்றது. இக் கதையில் இரண்டு மனிதர்கள் இரண்டு கொள்கைகளுக் காகப் பெரும்போர் செய்திருக்கின்றார்கள். அம்மனிதர் களில் ஒருவன் கௌசிகன். மற்றவர் அரிச்சந்திரர். இரண்டு கொள்கைகளில் ஒன்று பொய்மை. மற்றொன்று வாய்மை. இதில் கௌசிகன் பொய்மைக்கும் அரிச்சந் திரர் வாய்மைக்கும் நிலைக்களனாய் நிற்கின்றனர். ஒளியின் முன் இருள் நில்லாததுபோல் அரிச்சந்திரரின் வாய்மை ஒளிமுன், கௌசிகரின் பொய்மை இருள் நிற்கமுடிய வில்லை. தருமம் வென்று, அதர்மம் தோற்றது. அரசியலை வெறுத்து, இல்லறத்தை இகழ்ந்து, துறவில் வாழ்ந்த கௌசிகன் தோற்றான்; அரசியலில் அமர்ந்து, இல்லறத் தில் இனித்த அரிச்சந்திரர் வென்றார். தேவவாழ்வு தோற்றது, மனிதவாழ்வு வென்றது. வசிட்டர்பால் வைத்த அழுக்காறே; கௌசிகரைத் தாழ்வித்து, வசிட்டரை உயர் வித்து, அரசர் அரிச்சந்திரரை விழுப்பத்தில் விளங்கச் செய்தது. ஆகவே அழுக்காறற்று அறம் கைக்கொண்டு வாழும் வாழ்வே வாழ்வு என்பதை இக்கதை தன்வேராக் கொண்டுள்ளதென அறிக.

இக்கதையின் நடிப்பை முதற்கண் பார்த்த சிறுவர் காந்தி, அக்கணமே அன்று வாழ்ந்த அரிச்சந்திரரைப்

போல் இன்று என் வாழக்கூடாது? என்று தன் உள்ளே கேட்டு வாழ எழுந்தார். அவ்வெழுச்சியே காந்தி அடிகளை "மகாத்மா" என்று உலகம் உரைக்கும் உயர் நிலையில் வைத்தது. ஆகவே இக்கதை நிகழ்ந்ததா! நிகழ வில்லையா? என்று ஆராயாது இக்கதையால் பயனு? பயனில்லையா? என்பதை ஆராய்வதே அறிவு. இக்கதை பயனுடையது என்பதற்கு மகாத்மா அவர்களே சாட்சி. சமுதாயத்திலிருந்து உண்மை விடை பெற்றுக்கொண்டு வெளியேறி நிற்கும் இக்காலத்தில் எதிர்கால மனித சமு தாயமாகிய மாணவர்களின் இடையே இக்கதை வழங்கி தெளிவுறின் எதிர்காலம் உண்மை எழுச்சியில் உரு வெடுக்கும் என்பது என் எண்ணம்.

இவ்வெண்ணத்தின் எற்றத்தால் இக்கதை இயன்ற வரை இலக்கிய இன்பம் இயைய உரைநடைப் படுத்தி யுள்ளேன். இதைக்கல்விஉலகு உவந்தேற்று என்னை இப் பணியில் மேன்மேலும் ஊக்குவதாக. இந்நூல் அச்சாகும் காலத்தில் எனக்கு உறுதுணையாயிருந்த நண்பர்கள் வித்வான் பொன். கனகசபை அவர்கள், பண்டிதர் அ. ஆறுமுகம் அவர்கள் ஆகிய இவர்களுக்கு என் வணக்கம் உரித்தாகுக.

தமிழ்நிலை,
25-11-53

நா. சிவபாதசுந்தரன்

பி. நடராஜன்.

## உள்ளடக்கம்:


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | மங்கலக் குழந்தை | 1 |
| 2. | மங்கலம் மலர்ந்த மங்கை | 3 |
| 3. | விண்ணுலகில் விளைந்த சூள் | 7 |
| 4. | சூளுரையால் சூழ்ந்த சூழ்ச்சிகள் | 9 |
| 5. | காசிநகரில் கடனறி காட்சி | 29 |
| 6. | மயானத்தில் எழுந்த மாபெருங் காட்சி | 48 |

A. Kanagasabapathy.
J. S. C "A"
K. H. C.
25. 1. 55

கடவுள் துணை.

# சத்திய சரிதை

அல்லது

## சூளுரையாற் சூழ்ந்த கதை.

### 1. மங்கலக் குழந்தை.

*சந்திரதயன் சால்பு:*

"**நா**டென்ப நாடா வளத்தன" என்ற திருவள்ளுவர் வாய் மொழிக்கு இலக்காகிய நாடு **கன்னேசி நாடு.** இவ்வளத்துக்கு நீர் சுரந்து பாயும் **கண்டகி** என்னும் ஆறே காரணமாகும். இவ்வாற் றின் இனியசெயலால் அது குன்றாத விளைபொருளும், தக்க அறிஞரும், குறைவில்லாச் செல்வரும் பொருந்திய நாடாயிற்று.

**பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்** என்னும் ஐந்தழகுகளும் அமைந்த கன்னேசி நாட்டிற்கு **கன்னமாபுரி** என்பது தலைநகராகித் திகழ்ந்தது. அது அன்னம்ஆடும் அகழியும், மள்ளர் மகிழும் வாவியும், மன்னர் மயங்கிடும் மதில்களும், மாதவர் வியந்திடும் மாளிகைகளும் பொலிந்து செல்வத்திலும் சீர்மையிலும் தேவருலகையும் விஞ்சி நின்றது. மூதறிவாளரின் முயக்கத்தால் அந்நகரம் முதன்மைபெற்றது.

சத்திரகுலத் தோன்றலாகிய **சந்திரதயன்** என்னும் சால் புடைய மன்னன் அந்நகரைச் செம்மையாய் ஆண்டான். அளவில்லா அரசசெல்வத்தில் திளைத்த தனக்குச் செல்வத்துட் செல்வமாகிய மகப்பேறு இல்லையே எனக் கவன்றான். கவன்ற மன்னவன், வேண்டிய வேண்டியாங்களிக்கும் தானமும் தவமும் தவறாது தலைக்

கொண்டான். இறைவனருளால் சந்திரதயன் சால்புமிகுந்து ஒரு தெய்வக்குழந்தையைப் பெற்ருன். அக்குழவியைக் கண்டோர், "இது சந்திரவிம்பமோ" என அயர்ந்தனர். அம்மகவில் அமைந்த அழகின் ஒளி அரண்மனையெங்கும் எறித்தது. சந்திரதயரின் களிப்பு கடலிலும் பரந்து நின்றது. செந்திருவனைய அம்மகவுக்குச் **சந்திர மதியார்** எனப் பெயரிட்டனர்.

## சந்திரமதியார் தோற்றம்:

சந்திரமதியார் பூமியில் உதித்ததும் அசரீரி ஒன்று "இம் மகவின் கழுத்தில் ஒரு மங்கலநாண் உள்ளது; அது எவன் கண்ணிற்குப் புலப்படுகின்றதோ, அவனே இவளுக்குத் தலைவ னுவன்" என்றுகூறிற்று. உடனிருந்த எல்லோரும் அக்குழவியை உற்றுநோக்கினர். அம்மங்கலநாண் ஒருவருக்கும் புலப்பட்டிலது, ஆனல் கண்ணுடியின் மூலம் பார்த்தவர்களுக்கு மாத்திரம் அது காணப்பட்டது, அதனல் அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர், சந்திர தயன் தன்சால்பு சிறந்ததைச் சிந்தித்து எங்கும் மங்கலம் எழுப்பி ஞன். எல்லோரும் "மங்கலக்குழந்தை" என மனமாரப் புகழ்ந் தனர்; "இத்தெய்வக்குழந்தையின் தோற்றத்தால்" கன்னேசி நாடு உலகில் கண்போல் விளங்குவதாயிற்று. மங்கலக்குழந்தையாகிய சந்திரமதியார் சிற்றிலிழைத்து விளையாடும் பேதைப்பருவமும் பெதும் பைப் பருவமுங் கடந்து; கற்பனகற்றுக் கண்டோர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து

> **"உன்னைக் கொன்றன் றுருவிலி யாக்கினேன்**
> **தன்னைக் கொல்லுவ தாண்மைத் தனமலாற்**
> **பின்னைக் கொல்வதேன் பெண்பிறப் பாகிய**
> **என்னைக் கொல்லுவ தேழைமைப் பாலதே."**

என்று தன் கனிவாயால் மன்மதனைக் கண்டிக்கும் மங்கைப்பருவம் அடைந்தார்.

A. Kanagasabapathy
Prep. C. C. E.
K. H. C.

## 2. மங்கலம் மலர்ந்த மங்கை.

மங்கலம் மலர்ந்த மங்கை.

### கோசல நாட்டுக் கொற்றவன்:

**நி**லம் எங்கும் நித்திலம் விளங்கப் பைம்புனற் பரப்பிற் குவளைகள் காட்சி யளிக்கும் வளம் வாய்ந்தது **கோசலநாடு.** இக் கோசலநாட்டின் கொற்ற நகர் **அயோத்தி** என்று அழைக்கப் படும், இந்நகரோ, பண்பின் நலம் பழுத்த பண்பினரை உடையது. இம்மக்களுக்கு கொடை, அருள், நீதி, குடியோம்பல் ஆகிய நான்கும் நலத்த **அரிச்சந்திரர்** என்பவர் அரசராக, வாய்த்தார். உண்மையே அவர் உயிர்; நடுநிலைமையே அவர் உடல்; அருளே அவர் உலகம். இம்மன்னர் ஆயிரம் மணித்தூண் அமைந்த அரண்மனையில் முத்தணி செழும்பொன் குடை நிழற்ற முறைசெய்து வீற்றிருந்தார்.

ஒருநாள் அருந்தவச்செல்வர் அநேகர் ஆங்குவந்தனர். வந்த அந்தணரை அரசர் எதிர்கொண்டு, அவர் திருவடி தம்முடியிற்சூடி இருக்கைகொடுத்து இருக்கச்செய்தார்; "சுவாமிகாள்! தாங்கள் இங்கெழுந்தருளியது, அடியேனும் என்குலத்தவரும், என்நாட்டவரும் செய்த தவப்பயனேயாகும்" என்று இன்னுரை கூறி மகிழ்ந்தார். "அருந்தவத்தீர்! எவ்வெத் தேயங்கண்டீர்? எத்திசை புகுந்தீர்? எத்தீர்த்தங்கள் ஆடினீர்? புதுமை என் அறிந்தீர்?" எனவினவினுர். அதுகேட்ட அத் தவத்தினர், "மன்னவ! நாங்கள் கன்னுேசி நாட்டுக் கண்டகி நதியில் நீராடியபின், உம்மைக்காண இங்கு வந்தோம். அந்நாட்டில் சந்திரகுலத்து மன்னனுகிய மதிதயன் மதியணி செஞ்சடைச் சிவனருளால் சந்திரமதி என்னும் பெயருடைய பெண்குலத்திருவைப் பெற்றனன். அவள் அழகிலும், அறிவிலும் மிக்கவள்; அவளை மணக்க மன்னர்பலர் மனங்கொண்டனர்; எனினும் மதிதயன், தன்மகளைப் பற்றிய சிவன் செய்தியைத் தெரிவிப்பவர்க்கே அவள் உரியாள் எனக் கூறியதும் அதனுல் அவர்கள் அவ்வெண்ணத்தைக் கைவிட்டனர்; அவளே நினக்கு மனைவியாதற்குத் தகுந்தவள்" என்றுகூறி விடைபெற்றுச் சென்றனர். முனிவர்கள் சென்றபின் அரிச்சந்திரர் அகம் நெகிழ்ந்து சந்திரமதியைத் தன் வாழ்க்கைத் துணைவியாகக் கொள்ளவேண்டும் என ஆசை கொண்டார்.

A. Kanagasabapathy
Prep. C. C. E.

## சந்திரமதியார் சுயம்வரம்:

இஃது இவ்வாருக, தன்மகளின் திருமணக் கோலத்தைக் கண்டு களிக்கவேண்டும் என்று மதிதயன் எண்ணினன். அக்கால வழக்கப்படி ஓர் அரசகுமாரி தன்தலைவனைத் தானே அரசர் அவையில் தெரிந்து எடுக்கும் உரிமை பெற்றிருந்தாள். அறிஞர் இம்முறையான திருமணத்தைச் சுயம்வரம் என்பர். மதிதயனும் இவ்வாறு மலர்சூடிக்கொள்ளும் மணத்தை மேற்கொண்டு எல்லா நாட்டு அரசகுமாரர்களுக்கும் மணவோலை அனுப்பினன். ஓலை பெற்ற அனைவரும் குறித்தநாளில் மணக்கோலத்துடன் மணமண்டபத்தில் இருந்தனர். உலகைப் புதைத்த இருளைப் போக்கி, அலை முகட்டில் எழும் ஆதித்தனைக் கண்ட உடுக்கள், தாம் ஒளிநீங்கி தம் இருப்பின் உண்மையையும் இழந்து நிற்றல் போல மன்னர்கள் மணமண்டபத்துள் இருக்க, அரிச்சந்திரர் அவ் அவையில் வீற்றிருந் தார். வேதியரும் கூடினர்; மங்கையரும் நெருங்கினர்; நீதி ஆயும் அமைச்சரும் அணுகினர். வேறுபலரும் வந்து கூடினர். தோழியர் சந்திரமதியாரை ஆடைஅணிகளால் அழகுசெய்து சால்புடைக் கைகளில் சங்குவளையல் ஒலிக்க கயல்போன்றகண்கள் காதணிக ளோடு பொருத, மணமண்டபத்துள் கொண்டு நுழைந்தனர். இயற்கையிலேயே நிறையழகு நிலைத்த சந்திரமதியாரின்

**"செருக்குமோ கனச்செந் திருமக ளுறையுஞ்**
**சேயிதழ்த் தாமரை மலரும்**
**பெருக்குமா மறைநூ லுரைத்தநான் முகத்தோன்**
**பிறந்தசெங் கமலமும் வெள்க**
**முருக்கும்ஆம் பலுமென் காவியுங் குமிழு**
**முல்லையும் வள்ளையு மலர்ந்து**
**திருக்கிளர் கமல மிதுவெனச் செவ்வி**
**திகழ்வெயர் செறிதிரு முகத்தாள்."**

என்று புலவர்பாடும் புனித முகத்தைக் காண அரசர்கண்கள் கூசின, அந்த மணஅவையில் மங்கல ஓசையும், அருந்தவர் வாழ்த்தும், அரசர்கருத்தும் கலந்து உறவாடிக்கொண்டிருந்தன. தோற்றம் அமைந்த தோழியர் நடுவில் மயிலனைய சாயலும், திரு

நிகர்வனப்பும் உடைய சந்திரமதியார் அல்லிமலரிடையே அலர்ந்த தாமரையென விளங்கினர்.

## மங்கல மலர்ச்சி:

இத்தகைய அரசியார்க்கு அங்குவந்திருந்த அரசர்களின் பெயர், ஊர், வண்மை முதலியவற்றைத் தோழியர்தலைவி உணர்த்தினள். அரசர் அவையில் ஆதித்தன்போல் இருந்த அரிச்சந்திரரை அறிமுகஞ் செய்யும் முறைவந்ததும் அவர் அழகும், ஆண்மையும், அமைதியும், அறிவும் தெளிய உணர்த்தினர். உணர்ந்தபோது சந்திரமதியார் தோழியர் தோளைத் தாழ்த்தி அண்ணலை நோக்கினர், அப்போது அரசரும் நோக்கினர். அந்நோக்கில் செங்கயற்கண்ணினுள் திருக்கழுத்தில் இருந்த மங்கலநாண் அரசருக்குப் புலப்பட்டது. அக்காட்சி அவர் அகத்தில் வியப்பும் சினமும் மூளச் செய்தது. "ஈதென்ன மாயம்! கன்னியா இவள்? இல்லை! இல்லை!! ஆ! கழுத்தில் மங்கலநாண் மலர்ச்சிபெற, மன்னர் அவையில் மனம் ஒத்து மானமின்றி வந்தாளே! என்னதுணிபு? மதிதயன் மதிமயங்கினன்போலும்! மன்னர் குலத்தை மடையர் குலமாகக் கருதினன்போலும்! மற்றெருவருக்கு உரியாரை உள்ளத்தால் உள்ளலும் மறுவன்றே! எங்கும் எவரும் ஏற்றுக் கொள்ளாத இதனை, இவ்வரசன் மேற்கொண்டதற்குக் காரணம் யாதாகும்?" எனப் பல எண்ணங்கள் அவர் அகத்தில் அலைபோல் எழுந்தன. மன அமைதிபெருத அரிச்சந்திரர் மதிதயரைப் பார்த்து, "முன்னரே மங்கலநாண் பூண்டபெண் இன்னமும் ஒருவனுக்கெய்துமோ?" எனப் பகர்ந்தார்.

## பரமன்வாக்கைப் பல்லோர் அறிதல்:

அரிச்சந்திரரே தம் அருமைப்புதல்வியார்க்குத் தக்கதலைவன் என்னும் எண்ணங் கொண்டிருந்த மதிதயருக்கு இச்சொற்கள் "சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பெய்தாற்போல்" இன்பத்தைப் பெருக்கின, இறைவன் திருவாக்கை யாவரும் உணரவேண்டும் என்பதே கன்னோசி நாட்டின் கருத்து. ஆதலின் அவர் அவையாரை நோக்கி, "வேந்தர்காள்! அரிச்சந்திரர் அறைந்தமொழி பொய்மையோ? மெய்மையோ? எனக்கேட்டார். சந்திரமதியாரின்

மங்கலநாணைக் காணுத ஏனையோர் அதைப் பொய்மை என்றனர். மதிதயன் மன்னரை நோக்கி, "இஃது ஓர் இரகசியம்; என்மகளின் கழுத்தில் மங்கலநாண் இருத்தல் உண்மையே; அதை நாங்களும் கண்ணுடியின் மூலமாக அன்றி வெறுங் கண்ணினுல் காண்பதற்கு இயல்வதில்லை; இவள்கைக்கும் அது கிட்டாது; இவள் பிறந்த ஞான்று, "இம்மகவின் திருக்கழுத்தில் ஒரு மங்கலநாண் உள்ளது; அஃது எவன் கண்ணிற்குப் புலப்படுகிறதோ அவனே இவளுக்குத் தலைவனுவான் என்று விளம்பிய தெய்வவாக்கும் உண்டு" என்ருன்.

இம்மொழிகளைச் செவிமடுத்த அரசர் வியப்பில் ஆழ்ந்தனர்; செயலற்றவர்களாய் இருந்தனர். அவ்வமயம் சந்திரமதியார் அரிச் சந்திரரையே உள்ளத்தில் உன்னி, மணமாலையைச் சுழற்றி வானக வெளியில் எறிந்தார். வானத்தில் எழுந்தமாலை அரிச்சந்திரர் மணி மார்பிற் பொருந்தி மணம்வீசிற்று; அரசர் கண்களும் வண்டுகளாய் அம்மணமாலையில் மொய்த்தன, அப்போது

**"மாதர்க ளார்த்தனர் வானவ ரார்த்தார்**
**கீதர்க ளார்த்தனர் கேளிரு மார்த்தார்**
**சூதர்க ளார்த்தனர் துறவரு மார்த்தார்**
**வேதர்க ளார்த்தனர் வேலை யடங்க."**

இத்தகைய ஆர்ப்பொலிகளின் பொறபால் சந்திரமதியார் மங்கலம் மலர்ந்த மங்கையானுர். யாவரும் பல்லாண்டு பகர்ந்தனர், நூலறி நாவலர் நல்லுரை பொழிய; பல்லியம் பல பண்புற ஆர்ப்ப; அல்லி மலர்த்தொடை அணிந்த அரசியும் அரசரும் மங்கல மலர்ச்சியொடு மாளிகை புகுந்தனர். புகுந்த அரசரும் அரசியாரும் நறுமணப் பொருள்கள் பலவும் அணிந்து, மல்லிகை, மாதவி, சண்பகம், புன்னை முதலிய மலர்களைப் புனைந்து, மகிழ்ந்து இருந்தனர்.

அன்னுர் இருவரும், சிலநாள் இங்ஙனம் கன்னமாபுரியில் இன்பமுற்றிருந்து, பின் மதிதயன் முதலியவரிடம் விடைபெற்று, தம்பரிவாரங்களுடன் அயோத்தியை நோக்கிச் சென்றனர். செல்லும் போது அரசர், சந்திரமதியார்க்கு நளிமலர்ப் பொழில்களையும், குளி ருடைக் குளங்களையும், படர்சிறைப் பறவைகளையும் காட்டி மகிழ் வித்து அயோத்திமாநகரை அடைந்தார்.

இங்ஙனம் சிலகாலஞ் செல்ல, சந்திரமதியார் கருவுற்றுத் தன் அழகான உடம்பெல்லாம் உரோமஞ்சிலிர்த்துப் புளகாங்கிதம் மிக,

கரிய கண்களும் குழிந்து பள்ளமாக, மலர்முகமும் மதிமுகமாய் வெளுக்க, கதிர்மணிமார்பகங் கறுக்க, நரம்புகள் பச்சைநிறமாக, இல்லாத இடையின் இருப்பை எல்லாரும் அறியப், பத்துத்திங்கள் பண்புறச்செல்ல, சொல்லருஞ் செல்வன் ஒருவனைப் பெற்றார். அக்குழவிக்குப் பொன்செய் காப்பும், புலிநகப்பதக்கமும், ஐம்படைத் தாலியும், அரைஞாணும் ஆகிய அணிகள் எல்லாம் அணிந்து, **தேவதாசன்** எனப் பெயரிட்டனர். தேவதாசன் குறுநடை நடந்து குஞ்சரம் ஊரும் ஏழாவது வயதை எய்தினான்.

# 3. விண்ணுலகில் விளைந்த சூள்.

## *வஞ்சத்தில் எழுந்த வாதம்:*

ஒளியும் இருளும்போல் இன்பமும் துன்பமும் அப்போதைக் கப்போது தோன்றி மறைதல் இயற்கை. அன்பில் அமர்ந்து, இன் பிற்றோய்ந்து அருளாட்சியில் அறப்பயனை உண்டு உயர்ந்த அரிச் சந்திரரின் விதிவழியில் இன்பம் மறைந்து, துன்பம் வெளிப்படுங் காலம் நெருங்கிற்று. இத்துன்பத்திற்கு வித்து விண்ணுலகில் இடப் பட்டது. மாண்புடைய மண்டபம், மேடை, மதில், கோபுரம், உப்பரிகை ஆகிய இவைகள் எல்லாம் ஆடகத்தால் அமைந்து; வேதசாலை, கீதசாலை, யாகசாலை, யோகசாலை எல்லாம் செறிந்து விளங்குவது அமராவதிப் பட்டணம். அப்பட்டணத்தில் அயன் படைத்த அண்டங்கள் அனைத்தும் இதற்கு ஒப்பல்ல என்னும்படி மயனானவன் எண்ணிச்செய்த சித்திர மண்டபத்திலே ஒருநாள், வசிட்டர், கௌசிகர் முதலாய முனிவர்கள் கூடிய விண்ணவையில், இந்திரன் வீற்றிருந்தான். மண்ணுலக மன்னர்களின் நினைவு அவன் மனதில் உதித்தது. முனிவர்களை நோக்கி, "வாய்மைக்கும் நன்னூல் வளத்திற்கும், மனதிலுற்ற தூய்மைக்கும் மிக்கார் மண் ணுலகில் யார்? ஆய்மின்!" என்றான். உடனே வசிட்டமுனிவன்

"பாருக் கொருவன் பரதா ரசகோ தரன்வெம்
போருக் கொருவன் புகழுக் குமறைப் பொருட்கும்
நேருக்கும் வீடா மனுநூல் நெறிக்கும் பொறைக்கும்
ஆருக்கும் மிக்கான் அரிச்சந் திரனுகும் என்ருன்."

இதைக்கேட்ட விசுவாமித்திரன் மனம்பொருது, விரைந்தெழுந்து வெறித்த பார்வையுடன்,

"வெய்யன் பதகன் பரதார விருப்பன் வீணன்
பொய்யன் நிறையும் பொறையுஞ் சிறிதுமில் புல்லன்
கையன் கபடன் கயவன் தனைநல்லன் என்றிவ்
வையன் திருமுன் உரைத்தாய் இதென்னுக என்ருன்."

இவ்வாறு தன்பால் உள்ள வஞ்சத்தால் அடாதவார்த்தை கூறிய கோசிகரை நோக்கிய வசிட்டர் மனம் வருந்தி, "கௌசிகா! ஒப்பற்ற மெய்யோனை ஆராயாது ஒவ்வாதன உரைத்தாய், உரைத்த உன்வாய் வெந்திலை; நின்மனம் வெந்திலை; வம்பு சொன்ன நீ வெந்திலை; தெய்வமும் உன்னிடம் பொய்த்ததோ?" என்ருர். "வசிட்டனே! இல்லாதது கூறிய உன் நா புழுக்குமேயன்றி என் வாய் வேகாது" எனக் கௌசிகர் கடுஞ் சினங்கொண்டு கழறினர்.

## வாதத்தில் எழுந்த வஞ்சினம்:

இந்திரன் இருவரையும் கையமர்த்தி, முனிவர்காள்! "உங்கள் இருவேறு வாக்குகளில் ஒன்று பொய்ப்பின் செய்யத்தக்கது யாது? சொல்லுங்கள்," எனக்கேட்க, வசிட்டர், "ஆ! அவையத்தீர்! அரிச்சந்திரன் நன்னெறி தவறின், என் தவம் கெட யான் புலையர் சேரியில் ஓடு எடுத்துக் கள்ளை ஏந்தித் தென்திசை நோக்கிச் செல்வேன்!" என்று கூறினர். அதுகேட்ட நாரதர், "விசுவாமித்திரரே! அரிச்சந்திரன் குற்றமுடையவன் ஆனுல் வசிட்டர் இவ்வாறு சபதம் செய்வாரோ? நீர் உமது வஞ்சினத்தைக் கூறும்," என, விசுவாமித்திரர், அந்த அரிச்சந்திரனைக்கொண்டு பொய் சொல்லுவிக்காவிட்டால் என் தவத்திற் பாதியை அவனுக்குக் கொடுப்பேன்!" என்று கூறினர். "ஆ! இது அமையும்! அமையும்!! கௌசிகா! நான் அரிச்சந்திரர் அவையில் இதுபற்றி யாதும் சாற்ரு வண்ணம்

A. R. Ramanathan
T.S.C "A"



என்னைச் சுரர்காவலில் வைத்துச் செல்; நீர் மண்ணுலகு சென்று ஆதித்தன் அருங்குலத்து அண்ணல்பால் நண்ணுதிர். அங்கு நும் ஆள்வினையாலும் சூழ்வினையாலும் அவரது அறத்தையும் நீதியையும் ஆராய்ந்து பாரும்" என்று நாரதர் கௌசிகருக்குக் கூறினார். பின்னர் இந்திரன் சபை கலைய, அனைவரும் அவரவர் இருப்பிடம் அடைந்தனர். கௌசிகன் தாம் முன் மண்ணுலகில் இருந்த பொன் மலைச் சாரலில் அமைந்த பொழிலை அடைந்தனர்.

## 4. சூளுரையாற் சூழ்ந்த சூழ்ச்சிகள்.

### *வேள்விக்குப் பொருள் வேண்டல்:*

**ம**ண்ணுலகை அடைந்த மாதவத்தோனாகிய கௌசிகன் அரிச்சந்திரரை எங்ஙனம் பொய்யனென நிலை நாட்டுவதென நினைந்தான். முனிவர் பலரும் கோசிகனை அடைந்து வணங்கினர். அவ்வாறு தம்மை வணங்கிய மாதவர்களைக் கௌசிகன் நோக்கி, "முனிவர்காள்! நீங்கள் கேட்க இசைவீரேல் உமக்குச் சொல்வது ஒன்றுண்டு" என்றான். அவர்கள், "நும் சொல் அல்லல் தருவதாயினும் அகம் கொள்ளாது விடுவோமோ?" என்றார்கள். "அப்படியானால், நீவிர் அயோத்தி அடைந்து அரிச்சந்திரனைக்கண்டு; வேள்விக்குப் பெரும்பொருள் தரும்படி கேட்டுப் பொருந்திவருக" என்றான் கோசிகன். முனிவர் பலரும் கோசிகன் விருப்பத்தை நிறைவேற்ற மன்னர்பால் சென்றனர். மன்னர் மாதவத்தோரை மனத்தொடு வழிபட்டார். முனிவர்களும் தம்வரவின் காரணத்தை அவருக்கு அறிவிக்க எண்ணி, "மன்னவ! பெருவேள்விக்கு இரும்பொருள் தருதற்குரியார் எவர் என்று கௌசிகனோடும் ஆலோசித்தோம்; உன்னையன்றி வேறுயாரும் அப் பெருநிதி தருதற்குத் தகுந்தவர் இலாராக, நின்னிடமே பெற்றுவருக எனக் கௌசிகன் ஏவினன்; நாம் நின்பால் வந்தோம்" என்றார்கள்.

அரிச்சந்திரன், "ஐயன்மீர்! நீங்கள் விரும்பும் இப்பொருளைத் தடை யின்றித் தருகின்றேன்" என்று கூறி ஏவலரை நோக்கினர். உடனே, "முனிவர்கள், இன்றுவேண்டாம், யாம் வேள்வி இயற்றும்போது வேண்டுவம்; அப்போது நீ நல்குவையாயின் அமையும்" என்று கூறி, "நல்லோய்! நீ நீடுவாழி!" என வாழ்த்திச் சென்றூர்கள். அரசரும் அகம் மலர்ந்திருந்தார். முனிவர்களும் கௌசிகரை அடைந்து அரிச்சந்திரர் பெருவேள்விக்குப் பொருள்தர ஒப்புக்கொண்டதை அறி வித்து அடி வணங்கிச் சென்றூர்கள்.

சிலதினங்கள் கழிந்தன; கௌசிகனும் தான் புரந்தரனுலகில் வசிட்டரோடு செய்த சபத வாக்குத் தலையெடுக்க வஞ்சனையில் நிறைந்து நின்றான். ஒருநாள் மன்னரை நோக்கி கௌசிகன் விரைந்து சென்றான். மாதவன் வருகையைக் கண்ட மன்னர், எழுந்து வணங்கி உபசரித்து வந்த காரணம் வினவினர். "காவல் மன்ன! என் ஏவலால் வந்த மாதவர்களுக்கு மறைவேள்விக்குக் கொடுக்க இயைந்த பொருளைத் தருதிர்" என்றான் கோசிகன். அரிச்சந்திரர், "ஈவல்' எத்துணைவேண்டும்?" என்று போற்றினர். முனிவனும்,

**"யானை மேல்நின் றெறிந்தக வண்சிலை**
**போன தூரம் பொருள்குவிப் பாய்............"**

என்றான். அரசர் வாதுவரை நோக்கிப் பிறை எயிற்றுப் பெருங் களிற்றினைக் கொணர்மின்!" எனக் கட்டளை யிட்டார். யானையும் வந்து நின்றது. யானையைக் கண்ட கௌசிகன், "மன்னனே! நீ பொருள்தர இசைந்ததே அமையும்; அப்பொருளை நின்னிடத்தே அடைக்கலப் பொருளாக இப்பொழுதே வைக்கின்றேன், உத்தம வேள்வி ஆற்றும்போது யான் வருவேன்; அந்நாளில் எனக்கு இப்பொருளை ஈவாயாக!" என்று கூறி எழுந்து ஏகினன்.

## *விலங்குகளால் நாட்டு நலன் அழிதல்:*

தவமுனி பர்ணசாலையை அடைந்து தன் தவத்தின் பாதி பறிபோகாது பாதுகாக்க மிக ஆழ்ந்து சிந்தித்தான். காட்டிலுள்ள கணக்கில்லாத விலங்குகளை ஒன்று கூட்டி, அயோத்தியில் உள்ள

விளை நிலங்களை அழித்துக் குடிகளை வருத்துமாறு ஏவினன். ஏவிய விலங்குகளில், பன்றிக் கூட்டங்கள் முழங்கும் நீர்நிலைகளை முற்றும் உடைத்து, நீர் பாய்ந்தோடும் மடைகளும் தூர்ந்திடத் தேய்த்து, செந்நெல்லும் வெண்ணெல்லும் செழித்த வயல்களில், மதகரி மரையினம் ஆகிய இவைகளுடன் நெருங்கி, மோதி அழிவு படுத்தின. நாட்டு மக்கள் இதனைக் கண்டு நலி வெய்தி அரிச்சந்திரரை அணுகி "மன்னர் மன்ன! என்ன கொடுவினை! இதற்கு முன் இதுபோல் யாம் கண்டிலோம்; அரிஎன்ன! கரிஎன்ன! நரிஎன்ன! வரியுடைப் புலியென்ன! ஆ! அளவில்லா வனவிலங்குகள் வந்து செந்நெற்களையும் கரும்புகளையும், தினைக் கொல்லைகளையும், பொழில்களையும் அழித்தன; என்செய்வோம்! நமக்கு நேர்ந்த நட்டம் ஆற்றெணாது" என்று வணங்கி நின்றார்கள். இதைக் கேட்ட அரசரின் இதயம் இளகிற்று. "மக்காள்! இரண்டாண்டுகளுக்கு எனக்களிக்கும் இறைப்பொருளை இறுக்க வேண்டாம்; இப்போது உமக்குக் குறைவிலா நிதியும் ஆடையும் அளிக்கப்படும்; அதனைப்பெற்று நீவிர் உறையும் பதி செல்மின்!" என்றார், மக்களும் அவற்றைப் பெற்றுச் சென்றார்கள்.

## வேந்தரின் வேட்டம்:

மன்னரும் அமைச்சர்களுடன் ஆலோசித்துக் குன்ற வாணரைக் கூட்டிக்கொண்டு வேட்டம் செய்யப் புறப்பட்டார். கரடி, நரி, மான், நாவி, ஊகம், காட்டெருமை, மலையாடு முதலிய பலவிலங்கினங்களும் காற்றைப் போல் வேகங் கொண்டு வேட்டத்தில் மிகுந்தன. வானத்தில் வன்சிறைப் பறவைக் கூட்டங்கள் எழுந்தன.

**"வேல்கள் பட்டஒரு கோடி கோடி; விறல்**
**வில்லு மிழ்ந்தசுடு பல்கொடுங்**
**கோல்கள் பட்டஒரு கோடி கோடி; எறி**
**குணில்கள் பட்டஒரு கோடி தேர்க்**
**கால்கள் பட்டஒரு கோடி கோடி; எறி**
**கவண்உ மிழ்ந்தபல கற்கள் பட் (டு)**
**ஓலம் இட்டஒரு கோடி கோடி; சிலை**
**உண்டை பட்டஒரு கோடியே."**

இவ்வாறு இறந்து பட்ட விலங்குகளை, வேடர்கள் பருத்த கட்டைகளை அடுக்கித் தீமூட்டி அவற்றின் மேலிட்டுச் சுட்டுத் தின்ருர்கள்; நாய்க் கூட்டங்கள் ஒன்றேடொன்று சண்டையிட்டு நீர்நிலைகளில் நீரைக் குடிக்க, அவ்வேடர்கள் கள்ளை மிகுதியாக உண்டுவிட்டு, மன்னர் இருந்த இடத்திற்குச் சென்ருர்கள். "ஐயனே! இவ்விடத்தில் உள்ள விலங்குகள் இறந்தன. நாம்விட்டவேல் பிழைத்தும், வலைபீறியும், கணைதப்பியும் சிலவிலங்குகள் போயின; ஆதலால் அவ்விடம் போவதா? அல்லது அடவி புகுவதா? அன்றி நகர் அணைவதா? எவ்விடம் இனி இயைவது?" எனவேடர்கள் பணிந்தார்கள்.

## வேட்டத்தில் எழுந்த வெம்பன்றி:

வேடர்கள் உரையை வியந்து கேட்ட வேந்தர், "நீங்கள் சென்ற சென்ற திசை யெல்லாம் சென்று, அவ்விலங்குகளைக் கொன்று வாருங்கள்" என்று சொல்லிச் சென்ருர். அவ்வேடரும் கானிற் பரவிப் போயினர். குன்றுகள் தோறும் குளிர் வனங்கள் தோறும் சென்று, விலங்குகள் சென்ற அடிகளைத் தொடர்ந்து, பல திக்கினும் பதுங்கிய விலங்குகளை எல்லாம் கொன்று அவற்றின் தசைகளைத் தின்றும், புனல் உண்டும், மகிழ்ந்தார்கள். அத்துடன் நுழையமுடியாத அரண் ஒத்த அரிய காடுகளையும் அக்கினிக்கு விருந்தாக்கினுர்கள்.

இவ்வாறு தாம் ஏவிய விலங்குகள் அனைத்தும் இறந்தமையை அறிந்த விசுவாமித்திரன் உடனே ஒருபன்றியைப் படைத்தான். அருந்தவத்தோன் அப்பன்றியைப் பார்த்து, "நீ எத்தகைய படைத் தலைவரையும் எயினரையுந் தப்பாமற் கொலை செய்; அரிச்சந்திரனையும் இப்பெரும் பொழிலில் எவ்வாற்ருனும் அழைத்துவா" என இசைத்தான். உடனே பன்றி முனிவனை வணங்கித் தன் நெட்டெயிற்ருல் நீள் குவடெல்லாம் முறித்து, மன்னர் படைமேல் விழுந்து,

**"தலைகள் அற்றிடத் தடங்கரம் அற்றிட வீரர்**
**குலைகள் அற்றிடக் குஞ்சரம் அற்றிடக் கொலைஞர்**
**சிலைகள் அற்றிடச் செஞ்சரம் அற்றிடத் திரைகள்**
**வலைகள் அற்றிட....................................................."**

எற்றி நின்றது. இதைக் கண்ட ஒருவேடன் மன்னர்முன் சென்று, "ஐய! ஒரு வராகம், நம் வேட்டத்தில் வெஞ்சினங் கொண்டு வந்துளது; அதன்வருகையால் வான்எழும்; மண்எழும்; இது முன்னே திருமால் எடுத்த பன்றியோ? என் சொல்வது! அழிக்கும் வலிமைக்குத் திரிபுரம் எரித்த சிவனையே செப்பவேண்டும்;

**தலைநி றம்பச்சை; தன்னிறம் பொன்னிறம்; தறுகண்**
**நிலைநி றம்செழு மாமணி; குரம்இந்த்ர நீலம்**
**மலையி னும்பெரி தானதோர் வராகம்........................**
**..........................................................................**

வந்து வதைக்குது ஐயனே! வருக! வருக!! அப் பன்றியைக் காண எழுக!" என்றான். உடனே அரசர் தேரைத் திருப்பிச் சென்றார். பன்றியும் உலகழிக்கும் ஊழித்தீப்போல் வேந்தரை நோக்கி வெகுண்டு நின்றது; மன்னரும் மலைத்துத் தன் மறக்கணைகளை மாரிபோற் பொழிந்தார். அரசரின் அம்புக்கு ஆற்றாத பன்றி ஒரு மலையிடைச் சென்று மறைய, மன்னரும் மற்றையோரும் குளத்தில் நீராடிப் பூஞ்சோலையில் இளைப்பாறினர். தாபதர் சிலர் அங்கு வந்து, "மன்னா! இச் சோலை கோசிகனது; அவன் உன்னைக் கண்டால் உருத்தெழுவான்; உமிழ்ந்து தள்ளுவான்; ஈண்டு சேர்ந்தது தகாது" என்றனர். அரசர், "தவத்தீர்! யாம் அவர்க் கடிமை அன்றோ? எம்வயின் சீற்றம் ஏன்? யாம் இழைத்த தீங் கிருப்பின் எம்மைத் திருத்திப் போவதே அவர்க்குக் கருமமும் தருமமும் ஆகும்" எனக் கூறினர். முனிவர்கள், "அரசே அங்ஙன மாயின் அமைந்து அறிமின்!" என்று அகன்றார்கள்.

## கனவும், காரிய நிகழ்வும்:

மன்னரும் மற்றவர்களும் அன்றிரவு கூடாரங்களில் மெய்மறந்து தூங்கினார்கள் விடியற்காலையில் மன்னர் ஒரு தீக்கனவு கண்டு திடுக்கிட்டு எழுந்து, தன்மனைவிக்கும் மந்திரிக்கும் தெரிவிக்கலாயினர்.

**"என்னைஈன் றெடுத்த தாதை யாக்கையோ டெய்தி உம்பர்**
**தன்னையுற் றிமையோர் நீக்கத் தாரகைத் தலத்தமர்ந்த**
**பின்னையான் பிரசக் கூந்தல் பேதையர் ஐவர் தம்மை**
**முன்னை ஊழ் விதியி னாலே முயக்கமுற் றினிதிருந்தேன்."**

**" அருத்தியில் மணந்த மாதர் ஐவரில் அருந்த வத்தோற்
கொருத்தியை யானே ஈந்தேன்; ஒருத்திபோய் அவனோடுற்றாள்
ஒருத்திஊண் அற்ற கன்றாள்; ஒருத்திபோய்க் கண்இழந்தாள்
ஒருத்திவிட் டென்னை நீங்கா திருமைக்கும் உறுதிதந்தாள். "**

இக்கனவினால் என்ன காரியம் நிகழுமோ ? அஃதுணர்ந்திலேன் " என்றார். சத்தியகீர்த்தி அக்கனவின் பலனை ஆராய்ந்து கௌசிகரால் நீர் நம் ஆட்சிஇழந்தும் அரசியாரைப் பிரிந்தும், பல இன்னல்களுக்கும் ஆளாகப் போகின்றீர் என்று அறிவித்தான். சந்திரமதியார் அவற்றைக் கேட்டுத் திடுக்கிட்டு அரசனை நோக்கி, 'ஐய! என்னை இழந்தாலும்; என்வயிற்றில் உதித்த மைந்தனை இழந்தாலும்; இந் நகரை இழந்தாலும் நீதி முறையிற் சிறிதும் நீங்காதீர்' என்றார். என்னே! சந்திரமதியாரின் வீரவுரை.

## மாமுனிவர் மக்களும், மன்னரும்:

மன்னர் செய்தி இவ்வாறாக, அவர் விட்ட வாடிக்கணை தைத்த பன்றி, வாயால் மிகுந்த குருதி வடிய, உடல்துடிதுடித்து, கோசிகன் பால் வந்து தான் பட்ட பாடனைத்தையும் சொல்லிற்று. உடனே கோசிகன் சிவந்த கண்ணும் மனமும் உடையனாய், கடுங்கால் மூச்சினனாய் அழன்று எழுந்தான். அம்மூச்சிலிருந்து கிளிமொழியும், அன்னநடையும், மின்னல் இடையும் உள்ள இரு இளம்பெண்கள் உதித்தார்கள். முனிவனது வெஞ்சினத்தில் பிறந்ததால் அப்பெண் கள் புலைச்சியர் ஆனார்கள். முனிவன் அவர்களுக்கு எழுத்தும், சொல்லும், கீதமும், யாழும் நன்கு பயிற்றினான். இவ்வாறு இருக்கையில் மாதவர் சிலர், மன்னவர் பரிசனங்களுடன் சோலையிற் தங்கி இருத்தலை முனிவனுக்கு அறிவித்தனர். உடனே முனிவன் அப்பெண்டிரை நோக்கி, "மடவீர்! நீவிர் அரிச்சந்திரனிடம் சென்று பாடலால் அவனைப் பரவசப் படுத்தி அவனுடைய வெற்றிக் குடையினைக் கொண்மின்! அல்லது அவனையே கொழுநனாகக் கொண்மின்!" எனக் கூறி விடைகொடுத்தனுப்பினான்.

அப்பெண்டிர், அரிச்சந்திரனை அணுகி வணங்கி, " அழகருள் அழகனே! எம்மைப் படைத்த பிரமன் வீணருள் வீணன்; இந்திர னுக்கு ஆயிரம் கண்களையும் ஆதிசேடனுக்கு ஆயிரம் நாக்குகளையும்

படைத்த அவன். எமக்கும் உம்மைக் காண வாழ்த்த ஆயிரம் கண்ணும் நாவும் படைத்திலனே. ஐய! இவ்வுலகம் நின் நகர மாம்; வடகிரி நினது பீடமாம்; நினது தீபம் சூரியனே; கடலே மஞ்சனச் சாலை; நினது மனைவி திருமகள்; நின் குடை திங்கள்; இத்தகு பெருமை இயைந்த நின்னை எம்மால் அளவிடற்கரிது" என்று உரைத்தனர். அரசரும் வியந்து, "வல்லியீர்! நீங்கள் யார்? ஏது ஊர்? வந்த நோக்க மென்ன?" என்று கேட்க, மலரசை மார்போய்! நாம் இப்பூஞ்சோலையில் இருப்பவர். புல்லிய புலைச் சாதியர்; உம்பாதமே பணிந்து நிற்க வந்தோம்; நல்லிசை யாழும் கீதமும் சிறிது வல்லோம்" என்று தம் கையிலிருந்த மகரவீணையை மீட்டி,

**"காவியம் கண்ணும் மூடா**
**கவர்இதழ் தாமும் கோடா**
**வாவியம் கமலம் அன்ன**
**வதனமும் நுதலும் ஏரு**
**தூவியம் தோகை நல்லார்**
**சுவரின்மேல் எழுதி வைத்த**
**ஓவியம் பாடிற் றென்னப்**
**பாடினர் உருக யாரும்."**

மன்னர் வளம்பெறு பரிசில் பல அளித்தும், அவற்றை அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல், "பார்த்திப! நீவிர் முடிபுனைந்த அந்நாள் உயர்த்திய தவளக் குடையைத் தருதிர்" என்றார்கள். "புகழ்வழியில் பூத்த சூரியகுலத்தரசர் வழிவழிவந்த கொற்றக் கவிகையை நான் வழங்கேன், வேறு குடையைக் கண்டு விளம்பின் தருவேன்!" என்றார் மன்னர். அவர் இங்ஙனம் கூறலும், புலைப்பெண்கள் தம்மை மாலைசூட்டித் தாரமாக்குமாறு அரசனை வேண்டினர். அதனைக் கேட்ட அரசன் பொறுது காதைப்பொத்த சத்தியகீர்த்தி, "பெண்டீர்! தூரவிலகுமின்! மெய்நெறிகண்ட மன்னனிடத்துக் கேட்பன அறிந்து கேளும்" என்றான். "ஆ! முன்பு யாம் எண்ணி வந்த முழுமணிக் குடையும் தந்தீரில்லை! பின்பு யாம் குறித்த இன்பப் பெரும்பயன் தானும் ஈந்தீரில்லை!! உம்பால் வன்பே கண்டோம்; வள்ளன்மை கண்டிலோம்" என்றனர் புலைச்சியர். மீண்டும் அமைச்சன், "கொடுக்க வேண்டியவற்றைக் கொடுப்பதல்லாது கொடாதன

வற்றைக் கொடுத்தல் கொற்றவர் வழக்கமல்ல; எதை விடுக்க வேண்டுமோ அதை விடுத்தலே விதி.

**"நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த**
**தன்மையான் ஆளப் படும்."**

என்ற தமிழ் மறையை நாம் மறப்பவரல்லோம்; ஆதலால் சிந்திக்க வேண்டியவற்றைச் சிந்தித்து, அரசர்பால் சொல்லத் தகுந்த சொற்களைச் சொல்லி, உங்களுக்கு அடுப்பன கொண்மின்! அன்றேல் அகல்மின்!!" என்றான். "ஐய! உம்மை வரையாது வழங்கும் வள்ளல் என்றல்லவா வந்தோம்; இரந்தோர்க்கு ஈயாக் கயவன் என்று அறிந்திருந்தால் இங்கு வந்திரோம்" என்று அப் புலைப் பெண்கள் கூற, வேந்தர் உருத்தெழுந்து, "அமைச்ச! இவர்களைத் துரத்தும்!" என்றார். உடனே பக்கத்தே நின்ற பப்பரதேச வீரர் நெருங்க, அப்புலைச்சியர் உள்ளங் கலங்கி, கைகால் நடுங்கி, மார்பில் சேர்த்திய யாழும் மண்ணிடை எறிந்து, முனிவன் முன்போய் வீழ்ந்தனர். பூமியிற் பூந்துகில் புரண்டு இழுபடச் சிவந்த உதடுகள் துடிக்க, "உய்யவும் போகுமோ! உரையுமுண்டோ?" என்று வீழ்ந்த மக்களைக் கண்ட கௌசிகன், கடையுகக் கனலென எழுந்து, முனிவர் சிலர் தம்மைப் பின்தொடர அரிச்சந்திரரை அடைந்தான்.

## முனிவர் அடமும், அரசர் ஆண்மையும்:

கௌசிக முனிவர் வருகையை அறிந்த அரிச்சந்திரர் மனந் திடுக்கிட்டு, "மாதவர் தலைவ! அடியேன் எங்கே? தாங்கள் எங்கே? நான் புல்லன், புழுவினுக்கு நிகரானவன். ஐய! நான் கறைமிடற்றண்ணல் அல்லேன், கடல்வண்ணனு மல்லேன்; கமலனும் அல்லேன்," என்று நிலத்திடை வீழ்ந்தார். அரசர் கரங்களால் கௌசிகன் காலைப்பிடிக்க, அவன் உதறிப் பிடுங்கி, மணிமுடியை உதைத்தான். அரசரும், "ஐய! நின் மலரடிகள் உதைத்ததால் சிவப்புறுமே! உமக்குக் குடியாய் இருக்கத் தவறியதில்லை; உமக்கு அடிமையில் குறையுமில்லை; உருத்து உதைத்த உத்தம பாதம் வடுப்படுமே எனக் கவலைப்படுகின்றேன். என்மீது வெகுளி ஏன்? மொழிகுதிர்!" என்றார். அதுகேட்ட முனிவர், "அரிச்சந்திரா! என்மனம்போல வந்த விலங்கினைத் துணிசெய்தாய்! என்குறி

கொண்டு எழுந்த கேழலுக்கு இடர் செய்தாய்; கருமுகில் உலவுங் காவினைப் பொடிசெய்தாய்; என்நிறையால் உதித்த காதல் மக்களைக் கனன்று அடித்தாய்; அவர்கள் பரவசமாய்ப் பாடிய பாவினைப் பழித்தாய்; இவைகளை எல்லாம் நினைத்துப் பார்த்தால், தீவினைக்குரிய நீயே! பசுத்தோல் போர்த்த புலிபோல் இருக்கின்றாய். ஆகா! உன்செய்கை அழகிது" என்றான். அகம் அழிந்த அரசர், "என் ஐயனே! என்நாடு அழியினும், நகர் கெடினும், நறுமலர்ப்பூங்கா நலம் மடியினும், என் செழித்த சுற்றம் மாயினும், நீடு புகழ் வீழினும், நீர்தான் இத்தனையும் இயற்றினீர் என்பதை யான் முழுதுற அறியின் இத்தகைய செயல்கள் இயற்றுவேனோ? யான் சிறியன்! இப் புல்லனை ஒருபொருளாக நீங்கள் முனிந்தால், நும் பொறையும் அருளும் என்மீது இல்லைப் போலும்" என்றார். உடனே கௌசிகன் வாய்மடித்து, மனங் கொதித்து, "ஏ! நீ படித்த வாசகம் எல்லாம் எனக்குப் பிதற்றிடற் பாலதோ! என் மக்கள் இசைத்த ஏழிசையை இழிவுபடுத்தி அவர்களை அடித்ததேன்? அருந்துயரில் ஆழ்த்திய தேன்? என்றான். அரசரும் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் மொழிந்தார். முனிவனும் முனிவில் மிகுந்தான். முனிவனின் கொடுமையைக் கண்ட கொற்றவர், "மாதவ! மாதரை மோதிய கை குறைக்கினும், கண்ணினைத் தோண்டினும், மெய் குறைக்கினும், வேண்டியவாறு நீ செய்க," என்றார். "அரசனே! நீ என்மக்களை மணக்கின் என் வெஞ்சினம் தணியும்," என்றான் முனிவன். "நாயக! புலைக்குலத்தொடு புரவலர் புல்லுதல் நல்லதோ? என்னைக் கொல்லினும், நின் விழியழல் சுடினும், என் உடல் உயிர்விடுத்து ஏகினும், மேனியை வெட்டி அரிந்து கூறிடினும் இச்சொற்கு இசையேன்" என்றார் மன்னர். "ஆ! என்கோபம் தணித்திலை! என் மங்கையர் தாபம் தணித்திலை!! அப்படியானால் என் சாபம் நீ பெறுவாய் அறிதியோ? என்றான் முனிவன். மன்னர், "முனியரசே! நும் சொல்லுக்குக் கட்டுண்டு கிடப்பதிலும், நான் காலன் கயிற்றுக்கு இலக்காகுதல் நன்று நன்று! அளிக்க நின்சாபம்; எடுக்க நின் வெம்மொழி! நின்சினம் தடுக்கிலேன்; என் நிலைதளர்த் திலேன்!" என்றார்.

## முனிவன் சாபமும், அரசர் சால்பும்:

இவ்வுரை கேட்ட இருடியின் இதயம் இடிந்தது; என்ன இவன் பெருமை! துணிவு! என வியந்தது. எனினும் விண்ணவர் அவையில் விளைந்த சூளுரையை நினைந்ததும் முனிவர் மனம் கல்லாக மாறிற்று. "அரிச்சந்திரா! உன்னைப் பொறுக்கிலேன்; இருமைக்கும் இழிவான இன்னல்கள் இயற்றிய நீ — புலைச்சியரைப் புல்லேன் எனப் புகன்ற நீ — குடிமை செய்யும் புலையர் குலத்திற்கே அடிமையாவாய்!" என்றான் முனிவன். அதுகேட்ட அரசர் "தவத்தோய்! கொஞ்சிக்குலாவும் குழந்தை இழைத்த குற்றத்தைப் பொருது தாய், தன்பாலில் நஞ்சிட்டு நல்கினால் அதை நாடி விலக்குவார் இந் நிலத்தில் உளரோ? இல்லை! இல்லை!! கருங்கடல் காய்ந்து கொதித் தால், அக்கொதிப்பை மாற்றத் தண்ணீர் யார் தருவார்? ஒருவரு மில்லை, சீரியோய்! அதுபோல் என்னை நீ மிகச் சீறினால் யார் "அஞ்சல் என்று அபயம் தருவார்?" என்றார். "ஆகா! என்ன உன் உரை நலம்! வாயால் இவ்வையகத்தை விற்பாய் போலும்! என்னே நின் வல்லமை! என் அன்னை என்பாய்! என் அப்பன் என்பாய்! என் அருந்துணை என்பாய்! இப்படி இனிக்க இயம்பும் இன்சொல் உன்னைவிட வேறு யாரிடம் உண்டு?" என்றான் கௌசிகன், உடனே அரசர்

**"கண்ணை வேண்டினும் ஈகுவன்; காக்கின்ற**
**மண்ணை வேண்டினும் வாழ்வுடன் ஈகுவன்**
**பண்ணை வேண்டிய செஞ்சொற் பறைக்குலப்**
**பெண்ணை வேண்டிலன் யான்! என்று பேசினார்."**

ஆ! இவன் ஆண்டியாய், அயல் நாடெல்லாம் அலைந்து, அல்லல் அடைவதற்கு இதுதான் தக்க காலம் என்று நினைந்து, "செவ்வியோய்! நீ வாழும் நாடும், வளநகரும், வளர்நிதியும் தருவன் என்றாய்; உரைதவறாமல் உன் அரசு அளிக்கின் அமையும்" என்றான் முனிவன். அரசர், "தந்தேன்! தந்தேன்!! தகைசான்ற தரணி தந்தேன்!!!" எனலும், முனிவன், "தாரைவார்த்துத் தருமின்!" என்றான். மன்னரும் மனம் மகிழ்ந்து, "மாதவத்தோய்! இதோ! பெறுக பெறுக!" என்று தாரை வார்த்துக் கொடுத்தார். அதுகண்டு அயலிருந்த முனிவர்களை ஆரவாரிக்குமாறு முனிவன் வேண்டினான். உடனே முனிவர்கள், 'கூ! கூ!!' என் ஆரவாரித்

தார்கள்; ஆடினார்கள்; மேலாடையை மேலேவீசி 'நீயே மேன்மகன்' என்று மேலும் மேலும் பேசினார்கள்; அயோத்தி சென்று, "அரிச் சந்திரன் படைகளோடு பாரையும் கௌசிகனுக்குக் கொடுத்தான்" என்று கூறி, வீதிதோறும் நிறைகுடம் முதலியன நிலவச் செய்தார் கள். பின்னும் முனிவன் அரசரைப் பார்த்து, 'இதற்கோர் அடையாளம் வேண்டும்' என்று கேட்க அவர், தன்கையிலிருந்த கணையாழியைக் கழற்றி, "நாடும் ஊரும் செல்வமும் சேனையும் எல்லாம் ஊழிமட்டும் ஆளுதி" என்று உரைத்துக் கொடுத்து, "தவத்தவனே! குடைதந்தேன்; நீள்கொடி தந்தேன்; குழுவாய் அமைந்த என் படைதந்தேன்; தடையிலாது விடைதா" என்று அடிமேற் பரவி வீழ்ந்தார், என்னே அரசர் சால்பு!

## மறமுனிவனும், அற மன்னரும்:

அவ்வாறு வீழ்ந்த அறமன்னரை, மறம் படைத்த மனத்தனாகிய முனிவன், "நினது தோள்மாலை, வளை, வலையம், வடிவாள் முதலிய வற்றோடு நின்சேயும் தாயும் அணிந்த பொன்னணிகளையும் தந்தேகுதி" என்றான். ஆ! இவைகளா? "காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கு, இவைகள் நமக்கேன்? தூஉ! தூஉ!" என்று எல்லாவற்றையும் கழற்றி முனிவர் முன் உய்த்தார் அரசர். "ஆகா! எல்லாம் அளித்தீர்; இந்த அணியாடை ஏதுக்கு? அதனையும் அளித்துச் செல்வீர்" என்று மறத்தின் முடியில் நின்று கேட்டான் முனிவன். "அரனே! ஆடையை அளித்தால் நாம் ஆரை இரப்போம்!" என்று உலகை அளித்த அரசர் உரைத்து உடல் சோர்ந்தார்! கண்ணீர் தாரை தாரையாக வடித்தார்! கண் தாரைகண்ட கருங்கல் நெஞ்சனாகிய கௌசிகன் நெஞ்சம் கசிந்து, தான் போர்க்கும் பேனுடைய போர்வையை மூன்றாகக் கிழித்து உடுத்துப்போகுமாறு அரசர் முன் எறிந்தான்.

கூறைகழித்துக் காவியுடை தரித்து, கடலனைய சேனை கலங்க முனிவன் முன்போய் தாள்தழுவிப், போகவிடை கேட்டார் அரசர். மறக்கௌசிகன் உடனே, "அரசே! நானும் மாமுனிவோரும் வளர் வேள்விக்குப் பொருள்பெற வந்தோம்; முன் நின்னிடம் இரந்த பசும்பொன் அத்தனையும் தந்தே போவாய்!" எனத் தடைசெய்தான். ஆ! இஃதென்ன விதி! இவ்வுலக மாயையின் சூழ்வினை இப்படியா நமக்கு அமைந்துள்ளது? பொறேன்! பொறேன்!! இல்லை! இல்லை!

**"இடனில் பருவத்தும் ஒப்புரவுற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்."**

என்றபடி என் கடனறி காட்சியில் களங்கமுறுவேனோ? உறேன், உறேன்! என்று தன்னுள்ளே உரைத்து, "கோசிக! நன்னகரோடு பொன்முழுதும் நல்கினேன்; இன்னும் பொன்தர என்னிடம் இடம் உண்டா? என்ன நின்முறை?" என, அவ்வார்த்தை முடியு முன்னே, கோசிகன் "அறிவில்லாய்! யாருடன் இவ்வார்த்தை உரைத்தாய்? ஊருடன் உயர் பொன்னையும் நீருடன் அளித்தபோது, இதனையும் உரைத்து அளித்தியா? உன் நெஞ்சையும் தொட்டுச் சொல்! பானுகுலப் பார்வேந்தர் பகர்ந்தசொல் பழுதடைய நிற்பரோ? நில்லார்! நில்லார்!! அந்நீர்மை நின்னிடை நிற்கக் காணேன்" என்றான். அது கேட்ட மன்னர் தளர்ந்து, மடிந்து சாம்பி, "மதிவல்லோய்! இவ்வளவு பொருளையும் உமக்கு ஈய ஒரு அவதி தரவேண்டும்" என்றார். முனிவன் "அரசே! உன்னோடு மலையும் காடும் ஊரும் நாடும் உழன்று இழுபடுபவர் யார்? எவர் வருவார்? அவ்வாறு வந்தாலும் நான் சொல்லும் அவதியில் உனக்குப் பொருளை உவந்து இடுபவர் எவர்? இது திருட்டுரை! அடே! நீ அறைந்த அருநிதியை அளித்துப் போடா! உன்னை விடேன்" என்றான். உடனே, அரசர் அடியற்ற மரம்போல் முனிவர் கால்களில் வீழ்ந்து, விக்கலும் பொருமலும் மேலும் மேலும் எழ, கண்ணிலும் வாயிலும் ஊறும் நீர் வற்றிட, "ஐய! இனி நான் பிழைத்திலேன், நீர் அவதி தந்து ஆள்தரவேண்டும்; இஃதறிதிர். இதனைச் செய்வீராயின் பெரும் புகழ் பெறுதிர்" "அரசே! அப்படியா? கேள்: யான் ஓர் அவதி தருகின்றேன்; நீ தந்த நாட்டின் எல்லைக்கு அப்பால் தேடும் அப்பொருளே அல்லாமல் இந்நாட்டில் உள்ள பொருளைப் பெறேன்; இதற்கு உறுதி என்ன?" என்றான் முனிவன்: அரசர், "மாதவ! நான் காசி நாடு அடைந்த பின்பே நும்பணம் நீர் சொன்ன அவதியில் அளிப்பன்; அவ்வவதி என்?" என, முனிவன், "இருபது நாட்களே நான் கொடுக்கும் அவதி என்றான், அரசர், "ஆ! அங்கு போய்ப் பொருளைப் பெற நாற்பது நாட்கள் போதாதே? எங்குபோய் இருபது நாட்களில் பொருள் ஈட்டுவன்? என்றார். முனிவன், அரசே! இது யார் குற்றம்? என்குற்றமா? இல்லை! இல்லை!! எல்லாம் உம்குற்றம்! சரி, நாற்பது நாட்களில் நல்கும்" என்றான். சரியென்று அரசரும்

A. Kanagasabapathy.



சாற்றியே ஏகினர். கோசிகன் சற்றுச் சிந்தித்து மீளவும் அரிச்சந்திரரை அழைப்பித்து, "நீ குற்றமில்லாது அளித்த பொருளெல்லாம் அயோத்தி நாடு வந்து ஒப்பித்தபின்பே போகவேண்டும்; இங்ஙனம் இயற்ருவிடின், நான் அங்கு ஏக, 'நீ யார்? ஏன் வந்தீர்? யார் இப்பூமி அளித்தார்? அவர் இப்போது எங்கே?' என்று நின் அடியார் அறைவர், ஆதலால் நாடுவந்தே போவாய்" என்ருன். அரசர் "நன்று நன்று!" தாங்கள் நகருக்குச் செல்லுங்கள், நாயேன் நும்பின் இன்றே நாடு எய்துவன்" என்ருர். கௌசிகனும் தேர்மிசை ஏறினன். திரண்டு நின்ற மாதவர் கரியிலும் பரியிலும் ஏறி நின்றனர். உடனே, தேர் ஊர்ந்தது. அரசரும் அரசியாரும் நடுவுறச் சேனை பின்னே உற அயோத்தியை அடைந்தனர்.

## *தேர்வீதியில் அரசரும், முனிவனும்:*

தேரோசையும் படையோசையும் தெளிவுறக் கேட்ட மக்கள், "மன்னர் வருகின்ருர்! எங்கள் ஆருயிர் அரசர் வருகின்ருர்!" என்று கூவி எதிர்கொள்ளச் சென்று திரண்டார்கள். தேரைப் பார்த்தார்கள், அங்கு அரசரைக் காணது மனங்கலங்கினர்கள் தணலின்மேல் மிதிப்பவர்போல் நின்ருர்கள். என்ன! முனிவர் இரதம் ஏறியது நம் தீமையோ! நன்மையோ! அல்லது நாம் காண்பது கனவோ?" என்று நெருங்கிப் பார்த்தார்கள்; அரசர் முனிவன்பின்னே ஆண்டியாய்க் காவியுடை தரித்து அடிநோவ வருதலைக் கண்டார்கள்; கரங்களால் தம் கன்னத்தில் கன்ற அறைந்தார்கள் கதறினர்கள்; தம் தாளில் வீழ்ந்து வீழ்ந்து அயர்ந்தார்கள். "ஆ! இ∴து என்ன பாவத்தின் செய்கை!" என எண்ணும்போது, கௌசிகனும் இரதம் விட்டு இறங்கினன். உடனே அரிச்சந்திரர் கோசிகரை உடனழைத்துத் தலைநகர் புகுந்து, குதிரை உள்ளஇடம், மதகரி உள்ளஇடம், காசு உள்ளஇடம், தூசி உள்ள இடம் எல்லாம் காட்டி, "இதுதான் அரியாசனம் இதில் அமர்ந்தருள்வீர்!" என, முனிவர் ஏறி அமர்ந்தார். அரசரும் அவ்வேளையில் அடி பணிந்தார். சேனைத் தலைவரும் அவன் அடி தொழுதனர். அவ்வாறு தொழுது அரசரைப் பார்த்துப் பார்த்து அழுதனர். அழுது நின்ற அத்தலைவரை அரசர் கையால் அமைவு செய்து, "அன்பீர்! பழுதில்லாது நீர் எமக்குமுன் செய்த அப்பரிசு

போல் இம்முனிவர்க்கும் முறைசெய்யும்" என்றார். அவர்களும் வாய்புதைத்து, ஐய! நின் மணிமொழி மறுப்பவர்யார்? என முகத்தில் அடித்து அழுதார்கள். இதைக்கண்ட கோசிக முனிவன் திகைத்தான். "அறமே திரண்ட உரு இவ்வரசன். அன்று தேவர் அவையில் அவமே புறங் கூறினம்; என்ன என்புத்தி! செம்மை தெரிந்தவர் செயல் இதுவா? வெட்கம் வெட்கம்!" என்று மெய்மறந்து இருந்தான். பின் அரசரை நோக்கி, "அந்தண அரசே! நீர் இந்த வையகமும், இருநிதிக் குப்பையும், முன்னே தருவதாக மொழிந்த செல்வமும் எல்லாம் பெற்று, என் மக்களை மணஞ்செய்து, இங்கே இரு" என்று இணக்கமாகக் கையைப்பிடித்து இருக்கச் செய்தான்.

அரசன் தம் கையைப்பிடித்த முனிவனின் காலைப்பிடித்து, "மாதவ! நான் மெய்யேபிடித்து மிக்கவை செய்பவன், அப்படியான என்னை மைபூசிய கண்ணினுரின் கை பிடிக்குமாறு, கழறல் கடவுள் அறமா? ஐயனே! இச்சொல் ஒன்றை மற! சிறுத்த நாயேன் செய்த சிறுமை எல்லாம் பொறுத்தருள்" என்றார். கறுத்த கௌசிகன் "பொறுத்தனன்" என்றான். மீண்டும் வள்ளல் அமைச்சரைக்காட்டி, "இவர்கள் வையினும் நின் உரையை மறுக்கினும், பொறுப்பாய்; செல்கதி அளித்த செம்மையோய்! உன் அடைக்கலம் இவர்கள்" என்றார். பின் தன்தேவியையும், தனயனையும் குடைநிழலில் பொலிந்த கௌசிகனைக் கும்பிடச்செய்து, தம் படையை நோக்கி, "நீர் இங்கே நில்மின்!" என்று கை அமைத்து, 'விடைபெற்றேன்' என முனிவனைப் பணிந்து அரசர் ஏகினர், நவமணி குயிற்றிய அரியாசனத்தில் தவப்பெரு முனிவனும் இருந்தனன்.

## மக்கள் அவலமும், மாதவன் வியப்பும்:

இவ்வாறு தலம்முழுதும் தவமுனிக்கு அளித்துச், சிற்றரசர் பலரும் அமைச்சரும் அழுதுடன்போக, காவல் வீரர்கள் கண்ணீர் விட்டுக் கதற, குலமகளும் மடமயிலும் முன் நடக்கப் பின் நடந்தார் அரிச்சந்திரர். மலர்த் தொடையல் அற்றவராய், தோன்றும் முடியற்றவராய், முழங்கும் முரசற்றவராய், கரியும் பரியும் தேரும் எல்லாங் கைவிட்டுக், கால்கள் கன்ற நடந்த அரசரைக் கண்டோர், மனம் அழிந்து மார்படித்து அழுதனர்.

"மயிரோடும் சிறைஇழந்த போகில்போல்
வேலியொடு வரம்பி ழந்த
பயிரேபோல் கரம்இழந்த கரியேபோல்
பொறியிழந்த பாவை யேபோல்
உயிரேபோய்ப் பரதவிக்கும் உடலேபோல்
மத்தால்உள் உடைந்தலம்புந்
தயிரேபோல் தளர்ந்தலேந்து.......................
.............................................."

"ஆ! அரசர் மணிமுடியுழுத பாதம் சுடுபுழுதியில் நடக்குமோ? அனிச்சமும் அன்னத்தூவியும் பட அமையாத அரசியார் பாதங்களுக்குப் பரல் பரவிய பாதையா பாலித்தது? செம்மைக்காக உலகளித்த உத்தமனை, வனத்தே தேம்பிச் செல்லவிட்ட இம் முனிவனது மனங்கல்லோ! இவர்கள் இருக்க ஒருமனைக்குரிய நிலந்தானும் அளியாத இவனு எம்மை ஏத்திப் புரப்பவன்? ஆ! மின்னுமல் இடிவந்து வீழ்ந்ததே!" என்று வாய் அடித்து வயிறடித்து விழுந்தேங்கி நின்றுர்கள். அரசர், கன்றினெடும் பிடியினெடும் கிளையினெடும் காடுபுகும் களிறுபோல் மதில்கடந்து சரையு நதியைக் குறுகினர்; குறுகி, குருமணலில் விரிமலர்கள் வீழும் பூங்காவிற் புகுந்து, பூங்குழலாளும் திருமகனும் இருபால் வீற்றிருக்க இருந்தார். கௌசிகனும் அரசர் உரைப்பனவும் செய்வனவும் அறிய, அடியொற்றி அக்காவலில் ஒளித்திருந்தான்.

அவ்வமயம் அமைச்சர்கள் அரசர் அடிபோற்றி, "அரசே! நீ மீண்டு எக்காலம் எழுந்தருள்வீர்" என, அரசர், "முனிவனுக்குக் கொடுத்த மூதூரில் எக்காலமும் வருவதில்லை" என்றுர். அமைச்சர் எல்லாரும் ஏங்கி வீழ்ந்து, "அரசே! முனிவன் சடைபிடித்தும் கரம்பிடித்தும் மரவுரி பிடித்தும், இதோ வனத்தில் ஓட்டுகின்றோம்; ஐய! வளநாடு வாழ்விக்க வருவாய்!" என்று முறைபிடித்த மன்னரின் முழந்தாள்களைப் பிடித்தார்கள். இவ்வார்த்தைகளைக் கேட்ட அரசர் கரங்களால் தம் இருசெவிகளையும் பொத்தி, "அந்தோ! அவம்! அவம்!! குடிகெடினும், என் உயிர் கெடினும் கொடுத்தது வாங்கலாமா? என்றுர். அப்போது கோசிகன் எதிரே வர மன்னர் வணங்கினர். முனிவன், "அரச! நீ வேடுவரால் விலங்குகளைக் கொல்வித்தாய்! வெகுண்ட ஏனத்தை எய்தாய்! என்மக்களையும் இசைகேட்டுத் துரத்தி யடித்தாய்! இன்று என்னை

இகழ்ந்தாய்! எமக்களித்த நாட்டை யான்தர நீ வாங்கா யாகில் இவ்வமைச்சர் இப்பொழுது இயம்பிய அனைத்தும் செய்தவ னுவாய்" என்ருன். அரசர், "முனிவீர்! முனியாதீர்!! சிறியவர் செய்தபிழை பொறுத்தருள்க! பொறுக்காவிடின் பொறை என்னும்? முறை என்னும்? புலமை என்னும்? அவ்வாறு இன்றி வெறுத் திடினும், ஒறுத்திடினும், உமக்களித்த அரசுரிமையை இனி யான் மீண்டும் வாங்கேன் என்ருர். முனிவர் தம் சூழ்ச்சி பலியாமை கண்டு, "ஆ! என் இவனின் ஆண்மை? பொன்கேட்கப் பொன் அளித்தான், புவிகேட்கப் புவியளித்தான்; ஏதைக்கேட்கினும் ஈயும் குணமல்லால் 'இல்லை' என்னும் புன்மை இவனிடத்தில் இம்மியும் இல்லை" என்னு நீடு நினைந்து, பின்னும் அரசனை நோக்கி, "உண்மைக்கும் வண்மைக்கும் உரியோய்! அழல் வேள்வி ஆற்றுவ தற்கு அளிப்பேன் என்ற அருநிதி தருவாயோ? தாராயோ?" என வினவ, அரசர் "முனியரசே! அன்று அயோத்தி நாடு அளிக்கும் போது அதன் அமைந்த அருநிதியும் உட்பட அளித்தேன்; அந்நிதியில் இந்நிதியும் அடங்கிற்று என உணர்ந்தேன்; யான் உரைத்த உரையி னின்றும் மாறுபடேன்? நீர் ஆள்விட்டால் பொன் உடனே தருவேன்" என முனிவன், சுக்கிரனை ஒருபுறம் அழைத்து உள்ளிய தீவினை அனைத்தும் உரைத்துப் பொருள் பெற்றுவர அவனை மன்னனுடன் அனுப்பினுன்.

## மந்திரி மனமும், மங்கையின் மனமும்:

பின்பு மன்னர் உடன்வந்த அனைவருக்கும் நன்மொழி பலகூறி, நகர் செல்லுமாறு பணித்தெழ, சத்தியகீர்த்தி மனம் பொருது வீழ்ந்து அலறினுன். "அமைச்ச! நீ என்னுடன் வருவதால் கௌசிகருக்கு உதவுவார் உண்டோ? அருகிருந்து புவிநடத்த நின்போல் ஆங்கு அறிவுடையார் ஆருமில்லை; ஆதலின் நம் அணிநகர் ஏகு" என்ருர். உடனே, மந்திரி இடியேறுண்ட நாகம்போல் வீழ்ந்து, "கோதிலாப் பெருங் குணத்தாய்! இத்தனை நாள் இட்டபணி இருந்து செய்தேன். அருஞ் சுரத்தில் தங்கள்பணி யார்தான் செய்வார்? ஐய! பொறைச் செல்வியொடும், புகழ் குன்றுப் புதல்வனெடும் நானும் வருவேன்; அதனுல் தூயோ னுவேன்" என்று இரந்தான். ஆற்ருெணுத் துயரொடு தன்னடி தழுவிய தகையாளனை, அரசர் எடுத்து மேனிப் பொடி துடைத்து, முடிதடவி, விழிநீர் துடைத்து, அழுகை ஆற்றி, "அன்ப! வருந்தேல்!

நீ என்னுடன் வருதி! என்னே உன்அன்பு! நான் வாழ்வுற்றபோது என்னுடன் வாழ்ந்தாய்; தாழ்வுற்றபோது என்னுடன் தாழ்ந்தாய்; உன் நண்பு என்னே! மதிநலம் மலிந்த மந்திரியாகிய நீ, அவமுறல் அழகோ? ஊழ்வினையாலேயே இச் சூழ்வினைகள் நம்மைச் சுற்றிப் பிடித்தன என்பதைத் தெளியாயோ?" என்று கூறிக் கூட்டிக்கொண்டு நடந்தார். சந்திரமதியாரோ ஒளி வீசும் மதிலை உடைய நன்னகரை நோக்கியும், வான் அளாவிய வளவிய மதிலை நோக்கியும், தண்புனல் தவழ்ந்திடும் தடாகங்கள் நோக்கியும், கண்புனல் வடித்துச் சென்றார். கமலக்கால்கள் கன்ற கருங்கல் நிலத்திடை நடக்கும் தன் காதலியைக் கண்டார் காவலர். 'இறையருள் இருந்தவாறு என்னே' என்று சிரித்து, பெருமூச்சு விட்டு, "கண்ணே! என் தோள்களில் வந்து ஏறுக! ஏறுக!!" என்று உரைத்தார். அதற்கு அரசியார், "நாமவேல் இறைவ! பூமகளும் மண்மகளும் ஏறி இருந்த தோள்களில் நாயின் கீழான நான் ஏறின் என்ன கிடைக்கும்!!" என்று உரைக்க, மன்னர் விழிநீருக உயிர்த்து, "வல்லியனையாய்! உனக்கு என்றும் உளது இந்த அறிவு" எனக்கூறி; நீரற்றதும், நெட்டிலையின் நிழலற்றதும், வேரோடு வெந்ததுமான மரநிழலைவிரும்பிச் சென்றார். செல்லும்போது அரவு ஒன்று சீறி எழுந்தது. "ஆ! இஃதென்ன பாம்பு! ஏழுலகில் எம்மைப் போல் யாவர் இத்துணைத் துன்பம் அடைந்தவர்கள்? முன்தீவினை இருக்க மூவரை நொந்தென்? நம் முனிவரை நொந்தென்? அவரைத் தொடர்ந்து உதவ வந்த தேவரை நொந்தென்? ஒரு பயனுமில்லை" என்று நினைந்து பாலைவனத்தைக் கடந்து கோமதி நதிக்கரையை அடைந்தார். ஆதித்தனும் மறைந்தான்.

## முனிவர் சூதும், சுக்கிரன் வாதும்:

அந்த அமையத்தில் அமைச்சன் அடவிகளிலும் பொழில்களிலும் போய், வழிவந்த அடிவருத்தம் பாராமல், கந்த மூல பலாதிகளைச் சேர்த்து மன்னர் முன் வைத்து அடிபணிந்தான். அப்பொழுது அரசர் அக்கனிகளுள் மிக்ககனிகளை எல்லாம் எடுத்து சுக்கிரன் முன் வைத்து, 'அடிகாள் அருந்துக' என்றார். சுக்கிரன், "அரச! யான் காய்கனிகளைத் தின்று வளர்ந்தவன் அல்லேன். நீ கௌசிக முனிவருக்கு நிகழ்த்தும் விருந்தோம்பல் முறையெல்லாம் எனக்குத் தெரி

யும். தோய்தயிர், நறுநெய், பாற்சோறு இவைகளே வேண்டும்" என்று அடம் செய்தனன். மன்னர் குலைகுலைந்து, மொழிகுழறி, திருக்கரத்தால் தாள்பூண்டு "ஐய! நாடும் நகரும் முனிவர்க்கு அளித்து என்றுமே அறியாத இக்காட்டில் நான் வந்தமையைக் கண்டிலையோ? திக்கற்றவனாகிய நான் எத்திசை சென்று பால்அடிசில் தேடுவேன்? சொல்லுமின்!" என்று இன்னுரை பல இயம்பி அவனை உண்பித்தார். மற்றவர்களும் உண்டபின் அனைவரும் மணலிற் படுத்துக் கண்ணயர்ந்தனர். முனிவர் சூழ்ச்சியால் பெருமழை தோன்றி அவர்களை வருத்தியது. சுக்கிரனும் சீறும் அரவுபோல் சினந்து, சுடுசொல் பலமொழிந்து, "இன்னும் எத்தனை நாள் இத்தனை இன்னல் அனுபவிப்பது? நீ செல்லும் ஊர் தோறும் வர எனக்கு என்ன விதி? சொல்" என்றான். "தூயோய்! இதுவரை நாம் ஒரு நகரையாவது அடையவில்லையே; காடும் பாலையும் அல்லவா கண்டனம்; இனி ஒரு நன்னகரம் சேர்ந்தால் அந்நாளில் அடியேன் அறைந்த பொருள் அத்தனையும் அளிப்பேன் வருதிர்!" என்று மன்னனும் மங்கையும் மந்திரியும் அவன்தாள் பிடித்தனர்.

பொழுது விடிந்தது; பொற்கோழி கூவிற்று: உடனே எல்லோரும் எழுந்து கால் கடுக்கக் கங்கைக் கரையை அடைந்து நீராடி ஒரு சோலையிலே தங்கினர். முனிவர் ஏவலால் வனவிலங்குகள் பல அவர்களைத் துன்புறுத்திச் சென்றன. சுக்கிரன் மன்னனை நோக்கி, "மன்னவ! இன்னும் இன்னல் பல இயையும்; ஆதலின் உன் ஆட்சியை மீட்டும் பெறுவதே மேல்நிலை; நீ முனிவருக்கு ஈந்த நாட்டை 'ஈந்திலன்' எனக்கூறினால் போதும்; உன் அரசை உனக்கு உரித்தாக்கல் என்கடன்" என்றனன். அரசன் அதற்கு ஒருப்படவில்லை. "அரிச்சந்திரா! நான் சொன்னவை கொள்கிலை, சூழ்வினை உன்னைச் சுற்றி வரும்போது அனுபவித்து அறிந்து கொள்!" என்றான் சுக்கிரன். பின் அவர்கள் நெடுந்தூரம் நடந்து சென்று, யமுனை நதிக்கரையிலே தங்கினார்கள். அப்பொழுது முனிவன் மிக்க கோபத்தோடு அரசர் முன் தோன்றினன். மன்னர் பெரிதும் பேதுற்று, "எந்தம் நாயக! எம்மவர் நெடும்பிழை இழைத்தனரோ? அன்றி அந்த மாநிதியில் சில மறைந்துளவோ? உமது ஏவலைத் தவறிச் சிலர் பிழைத்தனரோ? அல்லது எதிர்த்தனரோ? யாது நிகழ்ந்தது? எடுத்தியம்பும்" என்றார். முனிவர், அரச! நீ வெங்கானம் சேர்ந்து, உடல் தளர்ந்து, உயிர் அயர்ந்து, நின்ற நீர்மையை உன்னி மனம் நெகிழ்ந்தேனாய் வந்தேன்; நீதந்த நாடும்

நகரும் தந்திலே! என மொழிந்து, அந்நாட்டில் வந்து அரசு கொண்டுறைக!'' என்று அறைந்தான். ஆ! அருந்தவ! எத்தனை முறை எடுத்துரைப்பினும் என்மனத்தைத் தாங்கள் அறியவில்லைப் போலும்; எந்தன் உயிரும், என்கிளைஞர் உயிரும், மண்ணுயிர்களும் அழிந்தாலும், அந்தணர் பலரும் அறியப்பகர்ந்த பொருளைத் தந்திலேன் என்று உரைசெய்தல் ஒண்ணுமோ? ஒருவன் தான் பிச்சையாக இட்ட உணவைத் தனக்குப் பசிவந்தபோது எடுத்து நுகருதல் இவ்வுலகில் இல்லை. ஆதலால் எனக்கு இது முறையல்ல'' என்று மறுத்தார். கோசிகன், "இனிவரும் பரிசு கண்டிடுக'' என்று அகன்றனன். அச்சோலையில் ஓரிடத்தில் மறைந்திருந்து சுக்கிரனை நினைத்தான். உடனே சுக்கிரன் முனிவன்முன் தோன்றினன். அவனோடும் அரிச்சத்திரனுக்கு அளவிலா இடுக்கண் இயற்றும்படி கூறி விட்டு முனிவன் சென்றனன். பின் சுக்கிரனும் மற்றவர்களும் யமுனை நதியைக் கடந்தனர்.

## தீயை எரித்த தீ:

இவ்வாறு அரசரும் அரசியாரும் அயர்ந்து செல்கையில் முனிவர் தீக்கடவுளை அழைத்து, "நீ காடு பொடிபட எரித்து மன்னனை வருத்து'' என்று கூற அக்கினி தேவன், "அந்தோ! யாரிடம் அனுகச் சொன்னீர்! மன்னவனோ மாதவத்தின் பொற்பினன்; அவன் காதலியோ கற்பின் மிக்காள்; அவள் என்னை எரிக்கும் தீ என்பதை அறியீரோ! ஆயினும் நின்சொல் மறுக்காது ஒன்று புரிவன்; அவர்கள் இருக்கும் வெளியிடம் எங்கும் எனக்குட்படுத்தி எரிப்பன்'' என்றான். கௌசிகனும் 'அப்படியே செய்க!' என்று ஏகினன். அரசரும் வெறிகமழ் சோலையும், வெற்பும், வெண்திரைப் பொய்கையும் நீங்கி, மூங்கில் செறிந்த வனத்திடையே சென்றார். அப்போது சேணிடையில் செந்தழற் பொறிகளும் கரும்புகையும் தோன்றின. அதுகண்டு அஞ்சினார் அரசர். சுக்கிரன், "அரசனே! இவ்வழல் அரசமரபில் ஒருவரை உண்டாலன்றித் தணியாது'' என்று ஏந்தலை அச்சுறுத்தினன், அரசன் "அங்ஙனமாயின், என்னுயிரை இவ்வெரிக்கு ஈந்து மற்றவரை வாழ்விப்பேன்'' என்று கூறி எரியிற்பாய முயலும்போது, அமைச்சன் அவரைத் தடுத்துத் தான் தீயில் பாயத் தொடங்கினன். அரசர் அமைச்சரைத் தடுத்து மார்புறத் தழுவி, "ஐய! இத்தீ மன்னவர் தம்மையன்றி மற்றவர் உயிரை உண்ணாது'' எனக் கூறினர். அதுகேட்ட சந்திரமதியார்,

"பதிஇறக்கப் பதிவிரதையர் பாரில் இருத்தல் வழக்கன்று, ஆதலால் அமைச்ச! நீ காக்குக! யான் இவ் வெந்தீப்பாய்ந்து உயிர்விடுவேன்" என முந்திச்சென்ருர். தன் அன்னையின் அகத்தை அறிந்த தேவதாசன் அலறிச் சென்று அடிவீழ்ந்து, "அன்னய்! என்னே நீர் பெற்றது உங்கள் இடுக்கணுக்கு உதவ வன்றே! முன் யான் அழலில் வீழ்வேன், பின் நீர் பிழைப்பீர்" என்ருன். அருந்தவத் தாசி அது கேட்டுத் தனயனைத் தழுவி மோந்து, "என் செல்வமே! நின் செவ்வாயில் இன்னும் பல்விழவில்லை; செய்திறன் அறியாய் ஆனுலும், இத்துணிவும் இந்த அறிவும் எங்கு கற்ருய்?" என்று கொஞ்சி அழுதாள். அழுகை ஆறி, "என் செய்தவப் பேறே! நாம் ஏதும் கைதவம் செய்தால் அன்ரே கடுங்கனல் நம்மை அணுகும், இல்லையேற் இரிந்தோடும்" என்று அண்டம் வெடிபடப் பரந்த அனல் முன் நின்று,

**"மறைவழி கடந்தேம் ஆகில்**
**வருவிருந் திகழ்ந்தேம் ஆகில்**
**முறைவழி செய்யேம் ஆகில்**
**மூப்பரை இகழ்ந்தேம் ஆகில்**
**பிறர்பொருள் நயந்தேம் ஆகில்**
**பிறர்நலம் கொன்றேம் ஆகில்**
**குறைசில செய்தேம் ஆகில்**
**கொல்எனக் கனலில் பாய்ந்தாள்."**

பாய்ந்ததும் அக்கினிதேவன், இவள் கற்புத் தீ வடவைக் கனலிலும் கொடியது; அது என்னை அழிக்கும் என்று ஒலிப்பு மாறி, அடக்கி, நா ஒடுக்கி, காலைக்கதிரவன் வரவு கண்ட இருளெனக் கழிந்தான். மூங்கிற்காடும் வாவி அமைந்து, முண்டகம், குமுதம், நீலம், முளரிகள் நிறையப் பூக்குஞ் சோலையாயிற்று. அனைவரும் வாரணவாசியை அடைந்து, நதியில் நீராடிக் காசி நாட்டிற் புகுந்தனர். சந்திரமதியார் வீரக்கற்பின் விளக்காய் விளங்கி நின்ருர். தீயை எரிக்கும் தீ கற்புத்தீ என்பது இதனுல் விளங்குகின்றதன்ரே.

## 5. காசி நகரில் கடனறி காட்சி.

### *அரசி திண்மையும், அரசர் கலக்கமும்:*

**கா**சிநகர் அடைந்த அரசனும் அரசியும் காசி விசுவநாதரின் ஆலயமடைந்து, எல்லா உயிர்களுக்கும் பரமபிதாவான சிவனை வணங்கி ஓர் அம்பலச் சாவடியில் தங்கினர். சத்தியகீர்த்தி சேகரித்து வந்த உணவுப் பொருள்களைச் சந்திரமதியார் இனிது சமைக்க அனைவரும் உண்டனர். அன்றைய நாள் கழிந்தது. மறுநாள் சுக்கிரன், "அரிச்சந்திரா! இனி ஒரு அடியேனும் எடுத்து வைக்க முடியாது; கௌசிகருக்குக் கொடுக்கும் பொருள் நீ கொடுப்பதானால் அதை இன்றே தா" என்று வெகுண்டு கூற, செவிகைப்பச் சொல் பொறுக்கும் செம்மலான அரிச்சந்திரர் ஆற்றுவது யாது? என அறியாது நின்றார். கலங்காத அவருள்ளமும் கலங்கியது. ஈருடலில் ஒருயிரான சந்திரமதியாரின் மனம் கலங்கிக் கவலையில் ஆழ்ந்தது. அவர் கண்கள் மேகமென நீர் சொரிந்தன. "வாய்மையின் வடிவான என் ஆருயிர்த் தலைவர் படும் இன்னல் என்னே! இவரின் வாய்மை வெற்றி பெறும் நாள் எந்நாளோ? அறியேன்; இதுவும் ஊழ்வினையின் கொடுவினை போலும்! அறக்கடவுளும் இது கண்டும் அகமுருகவில்லையே" எனக்கவன்று "ஆ! என் அறியாமை இருந்தவாறு என்னே! யானும் இங்ஙனம் கணவருடன் கலங்குவனேல் கடனறிகாட்சி எங்ஙனம் அமையும்? தலைவன் துன்பம் துடைத்தல் அன்றோ தலைவியர் கடன்! நான்,

> **"தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
> **சொற்காத்துச் சோர்விலாள் பெண்."**

என்ற பெண்ணீர்மை படைத்த பெண் அல்லளோ? என்னே என் சோர்வு! அயர்ச்சி!!" எனக்கருதித் தம்நிறையில் சூழ்வினையின் முறையை வைத்துச் சிந்தித்தனர். சில கருத்துக்கள் அவருக்குத் தோன்றின. உடனே தலைவரைத் தாழ்ந்து, "ஐய! நம்மிடம் ஒரு பணமும் இல்லை என்பதைத் தெரிந்த முனிவர், நம்பால் கண்ணோட்டம் கொள்ள வேண்டுமன்றி, யாம் அதை எண்ணி எண்ணி ஏங்குவதில் பயன் என்னை? இனிச் சூழ்ந்து செய்ய வேண்டியது யாது?

என்று எண்ணுவதே ஏற்புடைத்து! அஃதே ஆள்வினையாகும். இன்னும் ஒரு பகல் கழியின் அதுவே அவதித்தினம். ஆதலின் ஐய! தாங்கள் தளராது தயவுகூர்ந்து அடியாளையும், எம் செல்வச் சிறுவன் தேவதாசனையும், யாருக்கேனும் விற்றுக் குறித்த காலந்தவறாது முனிவருக்குப் பொருள் கொடுத்தலே தலையானது" என இயம்பினர்.

சான்றாண்மையின் ஊன்று கோலான சந்திரமதியார் சாற்றிய பொருளுரைகள், அரிச்சந்திரன் மனத்தை அம்புபோல் துளைத்தன. "உன்னை நோக்கில் கோசிகர் நல்லவர் போலும்! ஆ! அந்தோ! விலைகூறல் யாரை? மன்னர் அவையில் மறைபோரும் காணாத மங்கலியத்தைக் காண, காதலித்துக் கடிமாலை சூட்டிய கண்ணனைய உன்னையும், தம்பொருள் தம்மக்கள் என்று தக்கோர் சொல்லும் என்குலக்கொழுந்து தேவதாசனையுமா? இது என்ன நீதி! யான் இவ்வுலகில் இனி இருந்தும் பயன் யாது? ஆ! இறந்தேன்! இறந்தேன்!!" என்று அயர்ந்தார் அரசர். இதுகண்ட சந்திரமதியார், "என் உயிர்த் தலைவரே! வெவ்வாய் வடிவேலோய்!! இவ்வுலகில் திருவேறு தெள்ளியராதல் வேறு என்று தெளிந்த தாங்கள் இங்ஙனம் இன்னலுறல் ஏற்புடைத்தோ?

**ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்**
**செத்தாருள் வைக்கப் படும்.**

**ஒப்புர விஞல்வரும் கேடெனின் அஃதொருவன்**
**விற்றுக்கோள் தக்க துடைத்து.**

என்ற அறவுரைகளை உன்னுமின்! உணர்மின்!! நயனுெடு நன்றி புரிந்த பயனை நினைமின்! நினைமின்!!

**ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு**
**ஆழி எனப்படு வார்.**

என்ற அறத்தின் அறைகூவலை அறிமின்! அறிமின்!! ஊழிற் பெருவலி யாவுள? ஆதலால் அயர்ச்சி நீங்கி, அருந்தவர் கடனறியும் மாட்சியில் மலர்ச்சி யுறுமின்! இதற்கு எம் இருவரையும் விலைப்படுத்தலன்றி வேறுவழியேது? வாய்மைதவறி உரிமையுடன் வாழ்வதிலும், வாய்மை தவறாது அடிமையாய் வாழ்தல் வளமன்றே! இன்பமன்றே!!

**"சான்றவர் சான்ருண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னே பொறை."**

ஆதலின் நீர் இதற்கு அஞ்சுதல் அறியாமை. நும் சத்தியத்தை நிலைநிறுத்தலே என்நிறை! அஞ்சத் தகுவதற்கு அஞ்சாமை அன்றே அறியாமை; விதிக்கு விதியாகும் வழிகளை விரைந்து இயற்றுதலே வீரரின் தன்மை; ஐய! உள்ளத்தாற் பொய்யாது ஒழுகுவோம்; இதனால் உலகத்தார் உள்ளத்தில் உள்ளநாள் வரையும் உயர்ந் திருப்போம்! எழுமின்! எழுமின்!!" எனப் பகர்ந்தனர், ஆ! ஈதன்றே பெண்ணின் பெருமை! இவரன்றே வாழ்க்கைத் துணைவியர்! கற்பென்னும் திண்மை பெறின் பெண்ணின் பெருந்தக்க யாவுள ?

## *அரசியார் பிரிவும், அயலார் அழற்சியும்:*

சந்திரமதியார் பண்புரைகள் அரிச்சந்திரரை ஊக்கின! சுக்கிரனும் அரிச்சந்திரா! 'உன் மனைவியின் உரையே உனக்கு வழி!" என்ருன். உடனே அரிச்சந்திரர் சந்திரமதியாரையும் தேவதாசனையும் காசிநகர் வழியே கொண்டு, சிறிது புல்லை அவர்கள் தலைமேல் வைத்துச் சென்ருர். அவ்வமயம் நாணமும் சத்தியமும் முறையே அவரைப் பின்னும் முன்னுமாக இழுத்தன, அறிவாகிய திண்கரை அவர் கண்ணீர்க் கடலைத் தடுத்தது. "ஓ! மக்காள்! செல்வர்காள்! ஒப்புரவு உணராது உயிர்தளர, முன்னுள் செய்த வினைசூழ, இந்நாள் இளமையான பருவந்து என் குலமைந்தனையும், நீலக்கயல் விழியாளையும், விற்கின்றேன், யாரேனும் பொருள்கொண்டு வாங்கிக் கொள்ளும்" என அறைந்தனர்,

அவ்வோசை அந்நகர் உள்ளார் செவியில் நுழைந்தது. அஃது அவர்களுக்கு வியப்பை விளைவித்தது; மனத்தைக் கொதிப்பித்தது. பல்லோர் பலகணிகள் தோறும் நின்று பார்த்தனர். "இவன் பித்தனே! பேயனே! கள்வனே! இல்லை! இல்லை!! இவனே மன்மதன்! இவளோ பூமகள்! இவர்களை விலைகூறும் கொடுங்கடன் இவனுக்கு எங்ஙனம் இயைந்தது? இவ்விருவரையும் தக்கவிலை கொடுத்து வாங்கும் பொருளாளர் யார்? இந்திரன் சந்திரன் குபேரன் முதலியோரால் அன்றி வேறு யாரால் முடியும்." எனப் பலவாறு பகர்ந்து நின்றனர்.

இங்ஙனம் நகரமக்களின் இரக்கமும் வியப்பும்; அரசரின் அறமும், அரசியாரின் அருளும், தேவதாசனின் பொருளும், அவண் ஒருங்கே கலந்து பரவின. அப்பரவலின் நாப்பண் அக்கினிதேவன் ஒரு வேதியன் உருக்கொண்டு அரிச்சந்திரன் முன் தோன்றினன். அவன் மனம் அவர்கள் விலையை அறிய விரைந்தது. ஆதலின், 'ஏ! என் சொல்லினை? முன் சொன்னவை இன்னும் பகர்'' என்றான். "ஐய! மென்சொல்லியை இளமைந்தனை விலை கூறினன்'' என்றார் அரசர். "ஆ! அப்படியா? நன்று; "நின் சேயையும் மடமானையும் விற்கும் பொன் சொல்'' என்றான் வேதியன். அரசர் "வல்லான் ஒருவன் யானையின் முதுகின்மீது நின்று கவண்கொண்டு வீசும் கல்ஒன்று எவ்வளவு உயரச் செல்லுமோ அவ்வளவு பொருள் அளிப்பின் தருவேன்'' என்றார். "ஆகா! இவ்வளவா? இதோ அளிப்பன்!'' என்றான் பார்ப்பான். அப்பொருளைப் பெறச் சுக்கிரன் முன்வந்து நின்றான். வந்த அக்கினிதேவன் பொருள் தருவதாகச் சுக்கிரனது உள்ளங்கையில் அறைந்து சொன்னான். அவனால் அவ்வுறுதிமொழி ஒப்புக்கொள்ளப் பட்டது. அரசர் தம் மனைவியாருக்கும் மகனுக்கும் விலைச்சீட்டு ஒன்று எழுதிக் கொடுத்தார்.

சந்திரமதியாரின் அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்? கண்கள் நீரைச் சொரிந்தன; உடல் மண்ணிற் பதிந்தது; தலைவன் திருவடிகளைத் தலை அணி செய்தது; கரங்கள் அவர்காலைக் கதுவின; நெஞ்சம் அவர் அகத்தோடு கலந்தது. இம்முறையில் சில விநாடிகள் போயின. அவண் ஒரு சிற்றொலியும் உண்டாக வில்லை. இருவரும் பேச்சற்றனர். அவர்களின் பேசாதபேச்சு பேரொலியிற் கலந்தது. ஈற்றில், "நாயக! தாருங்கள் விடை'' என்று அயல் நீங்கினார். செல்வப் புதல்வனை தேவதாசன் அரசர் கழுத்தைப் பிடித்துக்கொண்டு, "அப்பா! என்னையும் என் அன்னை யையும் ஏற்ற சுமை நீங்கிற்றா? இனிச் சுகம் உற்றதோ? என் அப்பா!'' என்று அலறினான். உடனே பார்ப்பான், "அடே யாரையடா அப்பா! என்றாய்'' என்று கையைப் பிடித்து, இழுத்துக் கொண்டு செல்ல, அரசியாரும் அரசரை வணங்கிச் சென்றார். அரசரின் அருந்துயரை எடுத்து எழுத எழுத்துண்டோ? ஆற்றா அரசரை அமைச்சன் ஒருவாறு ஆற்றினான்.

இத்தகைய கடனறி காட்சியைக் கண்ட சுக்கிரன் திகைத்தான். ஆ! இத்தகைய இனியர் — அன்பினர் இவ்வுலகில் இருக்க முடியுமா?

இறையருள் பெற்ற இன்பினர் இவ்வுலகில் உண்டு என்பதனை அறிவதே இனிய செயல் போலும்! ஆ! தலைவன் மாட்டுத் தலைவியர் காட்டிய தலையாய கடன் என்னே! அவள் வாய்மையின் தலைவி! கற்புக் கடன்பூண்ட பொற்பின் செல்வி! அரிச்சந்திரனின் வாய்மைஅரணை அழியாது காத்த அணிமயில்! அலுவலகம் அறியா அவள் உள்ளம் அடிமைவேலை செய்ய அமைந்ததே! என்ன வீரம்! என்ன அறிவு! இத்தகையாளை இல்லாளாக இணைந்த இவனும் ஆண்மகனே, யாவான். ஏறுபோல் பீடு நடை ஏதிலார் முன் இவனுக்கு ஏன் இயையாது? இயையும்! இயையும்!! இவர்கள் எங்கே? கௌசிகன் எங்கே? 'விளக்கின்முன் விட்டில் போல்' கௌசிகன் உரை பொய்த்து மாய்தல் உண்மை! உண்மை!! ஐயோ! பாவம்; முனிவர் ஏனோ இச்சூள் கொண்டனர். அவர் அமரர் அவையில் வாதமிட்டபோது அரிச்சந்திரனை மாத்திரம் நினைந்தார் போலும்; அரசியாரை அறியார்போலும்! அறிந்திருப்பின் அவர் இச்சபதம் செய்திரார்; "எண்ணித் துணிக கருமம்" என்பது உண்மையே. அன்புக் கடலாகிய வசிட்டரிடம் அமைந்த அழுக்காறே அவர் ஆராய்ச்சியை அழித்தது போலும்! அழுக்காறு திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும் என்பது உண்மையாயிற்றே. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கம் அழிந்துபடும் என்பது போல முனிவன் அருந்தவத்திற் பாதியை இழந்து பரதவிக்கப் போகின்ருனே! ஆ! முனிவர் வெற்றி அருமையினும் அருமையே! என முடிவாக்கினுன்.

## *சல்லியன் சதியில், புரவலன் புலையனுதல்:*

தேறிய அரசர் சுக்கிரனை நோக்கி, "அரும்பொருள் வந்ததோ" என, "யான் முனிவர் பெருநிதி பெற்றனன்; ஆனுல் நின்பின் வந்த எனக்குப் பொருள் வேண்டாவோ? என்ருன். ஆ! 'பட்டகாலே படும் கெட்டகுடியே கெடும்' என்ருல் போலும் இன்னுமா சூழ்வினை! ஐய! நன்று அறைந்தீர்! உம் இரக்கம் என்னென்பேன், வருமின்! என்பின்னே வருமின்!! என்று

அழைத்துக் கொண்டு அமைச்சரை நோக்கி; "அமைச்ச! இச் சல்லியன் சாற்றிய செல்வம் கொடுப்பதற்கு என்னை நீ விலைகூறு" என்றார் அரசர். உடனே மந்திரி, "மன்னனேகேள்! அன்னையாய்! எமது ஆண்தகையாய்! நின்ற நின்னை விலைகூறல் நீதியோ? என்னைத் தாங்கள் விற்றுத் தரகர் பொருள் கொடுத்தல் தருமமாகும்" என்று வீழ்ந்து வணங்கினான். மண்ணில் வீழ்ந்த மந்திரியை மார்புடன் அணைத்து, ஒண்ணிலா ஒத்த முகவொளி ஒடுங்க, கண்ணின் புனலாட்டி, "என் நண்ப! கௌசிகன் கருதும் கருத்துக்கு இது ஏற்றதோ!" என்றார் அரசர். "ஆ! என்ன பாவம் எனக்குப் பாலித்தது" என்று எண்ணி எண்ணி, பூரவலன் முடியில் புல்சூடி, "ஏ! காசிநகர் மக்களே! உங்களில் ஆதி நூலினர் ஆயினும் அல்லது சாதி ஈனர்களாயினும், கோதிலாக் கொற்றவனைக் கொண்மின்! கொண்மின்!!" என்று பல வீதி தோறும் விலை பகர்ந்து சென்றான் அமைச்சன். அதுகேட்ட வீரவாகு என்னும் புலைமகன் தூக்கிக் கொண்டுவந்த காவை நிலத்தில்வைத்து, வாய்பொத்தி, உமக்கு வேண்டும் உறுபொருள் தந்தால் என்போல் புலையனுக்கும் இப்புரவலர் அமையுமோ? என்றான். "ஆம், இவர் அமைவர் அமைவர்; நமக்கு வேண்டுவது பணமே" என்றான். என்ன! பணமா? எவ்வளவு வேண்டும் என்றான் புலைமகன். உடனே அமைச்சன் ஆவணம் எழுதி அவன் கையிற் கொடுத்து, விலைப்பொருள் பெற்று, சுக்கிரன் கையில் அதை அளித்து, "ஐய! சுகமே போய்வருக" என்றான். சல்லியனும் மகிழ்ந்து சென்றான். புரவலரும் புலைமகன் காவைக் கழுத்தில் வைத்துக்கொண்டு புலையன்பின் தொடர்ந்தார். அமைச்சனும், "கொற்றவா! நின் மலர்த்தாளினை உற்றநாள் தொட்டு உன்பணி செய்தேன்; இப்பேறு இன்றோடு அற்றதோ?" என்று அயல் நின்று அழுதான். அரிச்சந்திரர் அதுகேட்டு அகம் உடைந்து செயலற்றவராய், வீரவாகு மனையை அடைந்தார்.

அப்புலையன் அரிச்சந்திரரை மயானத்தில் அமர்த்தினன். ஒவ்வொரு பிணத்தின் கொள்ளி ஆடையும், காற்பணமும், புலையனுக்கு உரியன; வாய்க்கரிசி மாத்திரம் அரசரைச் சாரும். இது புலையன் ஏற்பாடு. அங்ஙனமே அரிச்சந்திரர் ஆண்டவன் ஆனந்தத் தாண்டவம் ஆடும், சுடுகாட்டில் சிறுகுடிசையில் வாய்க்கரிசியைச் சோறாக்கி உண்டு வாழ்ந்தார்.

## அடிமைத் தொழிலில் அரசியார்:

இனி வேதியன் வீட்டில் இருக்கும் சந்திரமதியாரை நோக்குவாம். சந்திரமதியாரையும் மகனையும் விலைகொண்ட பார்ப்பானும் பார்ப்பினியும் தீவினையே உருக்கொண்டவர்கள். அவர்களால் சந்திரமதியாருக்கு இடப்பட்ட வினைகளோ, இழிந்தனவும் அளவிறந்தனவுமாகும். பிறந்தநாள் தொடங்கியே இளைப்புத்தரும் பெரும் வேலைகளையே செய்து காலம் கழித்தவராலும் அவை இயற்ற முடியாதன. அப் பார்ப்பனன் ஆணை இட்டபின்பே அன்னையார் உண்ணலும் உறங்கலும் மேற்கொள்வார். அவர்கள் அளிக்கும் அன்னமோ மிக அற்பம். ஒருநாள் விடியற் காலை எழுந்திருந்தால் அடுத்தநாள் நடு இரவுவரையும் இடும் வேலைகளோ அனந்தம். அரண்மனையில் இருந்து ஆனந்தம் அநுபவித்த தேவதாசனுக்கோ, அல்லும் பகலும் ஆள் அறியாக்காட்டில் அலைந்து தருப்பைப்புல் விறகு முதலியவைகளைச் சேகரித்துக் கொண்டு வருதல் வேலையாகும். அவை அளவில் இம்மி குறைந்தாலும், உடனே வேதியன் உணவில் பாதியே அளிக்க ஆணையிடுவன். அத்துணை அலக்கண் அமைந்த காலத்தும் சந்திரமதியார் பதியையோ பரமனையோ நிந்தித்து நொந்தாரில்லை. தம்மைக் கொண்டு தகாதன செய்விப்பார்கள் இடத்தும் அவர் அகத்திலேனும் முகத்திலேனும் சுளிப்புக் கொண்டாரில்லை. எதிலும் இன்முகமே தோற்றுவிப்பார். அரை வயிற்றுக்கு அமையாத அற்ப அன்னத்தையும் அவர் ஆறுதலாக அருந்தினர். எவ்வளவு விரைவுடன் வேலைகள் இயற்றினும் சிலபோது இரண்டொரு வேலைகள் நின்றுவிடும். அவைகளை மறுநாட் காரியங்களுடன் சேர்த்து மிக்க முயற்சியுடன் முடிப்பர். இவரின் இன்னலைத் தெய்வப்பெண்டிர் கண்டு வருந்தி நிற்பர்.

## அன்னையாரின் ஆழ்ந்த சிந்தனை:

இரவில் மெய்மறந்த உறக்கமே அம்மையாரை ஆட்கொள்ளும். இத்தனை காரியங்களில் அவர் மனம் அமையினும், உடல் உறுதி அற்றதால் அவற்றைத் தாங்குவதில்லை. அத் துன்பகாலங்களில் சில சிந்தனைகள் அவர் அகத்தில் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றும். அந்தோ! இன்னும் எத்தனை நாட்களுக்கு நாம் இத்துன்பத்தில் இணைந்து வாழ்வது? இந்த வினைப்போகம் எப்போது விடியும்!

தினைப்போதளவு நில்லாத இவ்வுடலையா இப்பார்ப்பனன் வருத்துவன். என் சித்தத்துள் சித்தாய் அமைந்த சிற்றுயிரைச் சிறைப்படுத்தவோ? வேறு எதுவேனும் செய்யவோ முடியுமா? மெல்லிய மெய், மாசற்ற மனம், பதுமமுகம் அமைந்த பாலகனையுமே இவ்விதி சூழ்ந்ததே! பாவிப் பார்ப்பான் பதைக்க அடிக்கும் கொடுமையை கண்கொண்டு காணவோ? ஆ! பாவி வயிற்றில் பிறந்ததால் எழுந்த பாவமா இது! நஞ்சு உண்டாரைக் கொல்லும்; என் பாவ நஞ்சு என்னைக் கொண்டாரையும் நசுக்கியதே! இதற்கு என் செய்வேன்! ஆரொடு நோவேன்! ஆர்க்கெடுத்துரைப்பேன்! பெறற்கரிய பேறே! பகைவராலும் பற்றமுடியாத அயோத்தி அரணில் பிறந்தனையே! பட்டின்மீதும் பாதுகை இன்றி நடந்தறியாத நின் துல்லிய பாதங்கள்; பருக்கைக் கற்களில் படிந்து வடுப்படுகின்றனவே! என்மகனே! உன்னிலை உன்ன என் உள்ளம் உருகுகின்றது! உயிர் சோருகின்றது! ஆ! ஐயகோ! என் நாயக! நீர் எங்கு இருக்கின்றீர்? என்ன செய்கின்றீர்? செங்கோல் பிடித்த கையால் எந்தச் செருநர் மாட்டுச் சிறுதொழில் செய்கின்றீர்? "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவை" போன்று துன்பகாலத்தில் உம்மைவிட்டுப் பிரியுமாறு என்விதி விதித்து விட்டதே! யான் உம்மை அடைதல் எப்போது? எப்படி? என்று கலங்குவாராயினர்.

சந்திரமதியார் பொறையன்றே பொறை. பாவமே உருக்கொண்ட பார்ப்பனிடம் அவர் நடந்து கொண்டமுறை, யார்மனதைத் தான் உருக்காது? அகிம்சையின் அணங்கு என்றல்லவா! அறையவேண்டும். பற்று உணவும், பாதி இருளில் உறக்கமும் கூட அவர் பொறையைத் தகர்த்திலது! தம் புதல்வனும் நாயகனும் படும் இன்னல்கள் ஒவ்வொன்றையும் எண்ணி எண்ணிப் பார்த்தும் அவர் அகம் அழிந்திலது! தெய்வத்தை நொந்திலது!! வினையில் வந்து வினைக்கு விளைவாவது" என உடல் நிலையை அவர் உணர்ந்தார். 'உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்று பிறப்பின் பெற்றியைத் தெளிந்தார். 'நேற்று இருந்தான் இன்று இல்லை இது அல்லவா உலகின் பெருமை' என்று உலகின் உண்மையையும் உன்னினர். யார் என்ன இயம்பினும், என்ன இடர் செய்யினும் தளராது, தன் உறுநோய் காப்பதே தக்கது என்ற எண்ணம் அவர் அகத்தில் அணைந்திலது. இவ்வளவு மனத்திட்பம் வாய்ந்த பெண்மணிகள் பலர் நம் நாட்டில் திகழ்ந்தார்கள் என்று அறியும்போது நாம் அடையும் பெருமிதம் என்னே!

## தனயனை இழந்த தாயின் நிலை:

பழவினை ஒருவருக்கு ஒன்றின்மேல் ஒன்றாய் இடையறாது வந்து கொண்டேயிருக்கும். காலை பாயலில் எழுந்த தேவதாசன், ஏழைக்குழந்தைகளுடன் காட்டகத்தில் நாடோறும் நிற்பன் வழக்கம்போல் ஒருநாள் மற்றப் பிள்ளைகளுடன் காட்டிற்குச் சென்றான். பல இடங்களிலும் திரிந்து திரிந்து, விறகுகளைப் பொறுக்கிச் சுமையாகக் கட்டித் தலையிற் கொண்டு வீடு திரும்பினான், வரும் வழியில் செழுமையாகத் தருப்பைப் புல் வளர்ந்த இடம் ஒன்று அவன் கண்ணிற்பட்டது. 'இது விட்டேகில் வேதியன் முனிவன்' என்று எண்ணி உடனே விறகுச்சுமையை இறக்கி விட்டுத் தருப்பையைப் பிடுங்கினான். கோசிகன் ஏவலால் அவண் மறைந்திருந்த கொடிய அரவம் ஒன்று அவனைத் தீண்டிற்று. அவன் வெறித்து வெருவி ஓடி, தரையில் ஓவென விழுந்தான். அதைக் கண்ட தோழர் அவன் அருகில் வந்து காரணம் வினவினர். அவன் தன்னை அரவு தீண்டியதெனச் செப்பி மூர்ச்சித்தான். உயிர் உடலிலிருந்து நீங்கிற்று. சூரியகுலக்கொழுந்து சுருண்டு மண்ணிற் கிடந்தது. மற்றப் பிள்ளைகள் மலைத்து நின்றார்கள். பாவிஊழ்தான் என்னே! என்று கூறிக்கொண்டே புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள்; உள்ளம் உருகிக் கண்ணீர் உகுத்தார்கள். "படத்தினால் பெரிய நாக விடத்தினால் இறந்தான்" என்று தங்கள் விறகுச் சுமைகளைத் தூக்கிக் கொண்டு, கழனிசூழ் காசியம்பதியில் நுழைந்தார்கள்.

இஃது இங்ஙனமாகப் பொழுதுஞ் சாய்ந்தது, கானகம் சென்ற மகனைக் காணாத சந்திரமதியார் உள்ளம் துடித்தது. வாயிலில் நின்று வளர்மதியன்ன தன்மகனை நோக்கிக் கொண்டிருந்தார். இதனால் வேலைகள் இடைப்பட்டு எஞ்சிக் கொண்டிருந்தன, வேதியன் அறிந்தால் வெந்துவிழுவானே; என்ற அச்சம் அவரை வாட்டியது. வெளிவந்து உற்றுப்பார்ப்பதும், வேலையைச் செய்வதுமாக அவர் உடல் உள்ளும் புறமும் ஊசலாடிற்று. அவர்கண்கள் கன்னேசி நாட்டுக் கான்முளையைக் காண விழைந்தன. கடைசி முறையாக மற்றைச் சிறுவர்களைக் கண்டனர் சந்திரமதியார். கண்கள் களித்தன, மனம் மலர்ந்தது; உடல் பூரித்தது; "இதோ! என் வேலை எல்லாம் முடிக்கின்றேன்" என ஆகாயக் கோட்டை கட்டினர் அன்னையார்.

ஆனால், அவ்விடத்தை விட்டு நகரவில்லை; அப்பிள்ளைகள் அருகு அணைய அணைய உற்று உற்று நோக்கினர். அவர்களிடையில் தன் இளவல் ஒருவன் மட்டும் புலப்படவில்லை, என் செய்வார்? அவருக்கு ஒன்றுந் தோன்றிலது. எப்போதும் இவர்களுடனேயே வரும் என்மகன், இன்று வாராமைக்குக் காரணம் என்ன? இவர்களை விட்டு விட்டு அதிக தூரஞ் சென்று விட்டானோ! இன்னும் மாலையாகவில்லை யென்று மயங்கி நிற்கின்றானோ! வழி தெரியாது அலைகின்றானோ! வெப்பத்தினாலும் பசியினாலும் வாடி மூர்ச்சை அடைந்தானோ! காட்டரவத்தினால் கடிபட்டானோ! எனப் பலவாறு சிந்தித்துக்கொண்டு இருக்கும்போது, அப்பிள்ளைகள் அவர் அருகணைந்தார்கள். தன்மகன் வாராமைக்குக் காரணம் யாது? என அறிய மனம் விழைந்தது; வாய்துடித்தது; அவர்களின் விடை யாதாய் வருமோ என இருதயம் இடித்துக்கொண்டது! கால்கைகள் நடுங்கின; கண்கள் விரைந்து இமைத்தன; மூளை குழம்பிற்று; நா அசைவற்றது. இம்முறையில் அப்பிள்ளைகள் தம்மைக் கடந்து சென்று விடுகின்றனரோ! என்ற அச்சம் அவரை அலக்கழித்தது. அவர் அவ்வமயம் அனுபவித்த துன்பநிலை வாழ்க்கையில் என்றும் அடைந்திலர் எனலாம்.

இந்நிலையில் அன்னையார் அருகில் அவ்விளைஞர் சார்ந்தனர். அவர்கள் முகங்கள் கருகி இருந்தன. அவர்களில் ஒருவன், "அம்மையே! உன்மகன் காட்டில் அரவம் தீண்டி ஆவியிழந்தான்" என மென்குரலில் கூறினான். வேல் நுழைந்த புண்ணில் எரி புகுந்தது போன்று அச்சொல் அரசியார் செவியில் பாய்ந்தது. கண்கள் இருண்டன. உணர்வற்றுக் கீழே விழுந்தனர். பின் அவருக்குச் சிறிது தெளிவு பிறந்தது. உடனே அவர் தன் மகன் இறந்த இடத்தை அவர்களாலே தெரிந்து கொண்டனர். கண்கள் நீர்க்கடலிலே நீந்தின. பாவம்! அன்று குறைபட்ட வேலைகள் யாவற்றையும் செய்து முடித்தால் அன்றி, வேதியன் மகனிடம் செல்ல விடமாட்டான். ஆதலால் வன்மையற்ற உடல் தள்ளாட, சிறிது சிறிதாக அன்று வேலைகள் யாவற்றையும் செய்து முடித்தனர். பின் மகனிடம் செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் வேதியர் அருகு அடைந்தனர், வாய்திறக்க மனம் நடுங்கிற்று, அவலமும் அச்சமும் அவர் அகத்தை நெருக்கின. ஈற்றில் வேதியனை வணங்கி, வாய்புதைத்துத் தம் புதல்வன் உயிர் நீத்ததை விம்மி விம்மி உரைத்தனர்.

இவ்வார்த்தை வேதியனுக்கு வெஞ்சினம் உண்டாக்கியது. "அடீ! பயனற்றவளே! அப்பையன் இறந்ததனால் உனக்கென்ன மோசம்? எனக்கு அடிமைப்பட்ட அவன் உனக்குப் புதல்வனுதல் எப்படி? என்ன உறவினுல் என்னிடம் வந்தாய்! சீச்சீ! உன் வேலையைப்பார்! அவனே அழிந்தான், என்பொருளன்றே அழிந்தது, நீ போகாதே!" என்ருன் வேதியன். அவர், "சுவாமீ! தாங்கள் கூறிய யாவும் உண்மையே! ஆயினும் என்கண்! என்உயிர்!! எங்கோ ஓரிடத்தில் இறந்து கிடக்கின்ருன் என்பதை நினைக்கப் பெற்றவயிறு எரிகின்றது; அதை என்னால் பொறுக்க முடியவில்லை, திக்கற்ற அடியாள் மீது சிறிது அருள் புரிவீரேல், அச்சிறுவனைப் பார்த்தெடுத்து எரித்துவிட்டுப் பொழுது புலர்வதன்முன் இவண் வந்து சேருவேன்" எனப் புலம்பி இறைஞ்சினர். கௌசிகரின் சூழ்ச்சியால் இரும்பாய் அமைந்த வேதியன் மனம் அறக்கடவுளின் அருளால் சிறிது இரக்கங்கொண்டு, "அடீ! வேலைகள் மிகவுண்டு; விடியும் முன் வருவாயாகில் ஏகு" என்ருன். "ஐயனே! இதோ! வந்து விட்டேன்? என்று சென்றனர் சந்திரமதியார்.

## காட்டகத்தில் சந்திரமதியார்:

நள்ளிருள் எங்கும் சூழ்ந்தது, வகைதெரியாத வழிப்போக்கு. மகனை நினைந்து புலம்புவர், "ஐயனே! பொன்னின்மிக்க பொன்னே! என அரற்றுவர்; முகத்தில் மோதிக்கொள்வர்; மயங்கி விழுவர்; ஆவியைத் தேடும் உடல்போல் என்மகனே! என்மகனே!! என்று அலைந்தனர். இம்முறையில் அவர் இளவரசனைத் தேடிச் சென்றனர். கல்லும் முள்ளும் காலின் மென்மையை நன்கு உணர, சந்திரமதியார் சிறுவர்கள் குறிப்பித்த ஆலமரத்தடியை ஒருவாறு ஆய்ந்து பிடித்தார். தன்மகனைக் கண்டார்; அருகில் சென்ருர், ஓ! ஓ! வென்று ஓடி வீழ்ந்தழுதார். அவர் ஆவி அகல்வதுபோல ஆயிற்று. அவர் கைகள் அப்பிள்ளையை வாரி அள்ளின. கண்கள் அம்மகனைச் சிறிது உற்று நோக்கின; வாய் பலமுறை வாரிவாரி முத்தமிட்டது. அந்தோ, பனியால் நனைந்தும், வெயிலால் உலர்ந்தும், பசியால் அலைந்தும் பிரியா உன்னுயிர், கொடிய அரவத்தால் அகன்றதோ! ஆருமற்ற ஆரணியத்தில் விடநோய் உனை விடாது வருத்த, நீ செய்த அவம் யாதோ? ஆ! அப்பா! உண்மையின் உறைவிடமே! இனியாரை நம்பி இவ்வுலகில் வாழ்வது! அரசரும் நானும் இனி இருப்பது வீண்! வீண்!!; பறையோசை யற்றுக் கழுகின்

சிறையோசை பெற்று, பற்றையின் ஊடே பஞ்சாய்க் கிடக்கப் பிரமன் விதித்த விதி இதுவா! என் செல்வமே! என் கன்றிய கன்னங்களேயும் கண்ணீர்த் தாரைகளேயும் காணவில்லேயா? கொடிகளாலும் செடிகளாலும் கீறுண்டு உதிரம் வடியும் என் உடலேப் பாராய்! வெவ்விய நெருப்பில் வெந்த தளிர்போல வாடி, விதியாரை நொந்து தனியே இருந்து யான் இரங்க; ஏன் அம்மா அழுகின்ருய்? என்று ஒருவார்த்தையேனும் கேட்டாயா? இதுவா! வயிறுநொந்து பெற்றபயன்! இதுவா! உன் நீதி! "பெற்றமனம் பித்தும் பிள்ளே மனம் கல்லும்" என்பது சரியேபோலும், என்கண்ணே! ஏன் வாய்திறந்து பேசுகின்ருய் இல்லே? இறந்து விட்டாயா? இல்லே! இதோ! சிரிச்கின்ருய் போலும்; இல்லே! இல்லே!! வெதும்புகின்ருய். அறத்தின் வேரான என் ஆண்டவர் நம்மை அடிமையிலிருந்து விடுவிக்க வருநாளில் "எங்கே என் ஆசைமகன்?" என்று கேட்டால் எதிர் ஏது சொல்வன்? "என் நாடோ முனிவர் கைவசப்பட்டது; என்தந்தை ஏக்கற்றுச் சென்ருன்; என்தாய் வேதியனுக்கு அடிமைப்பட்டாள்; யானே சிறுவயதில் சிறுமைப் பட்டேன்; இனி இந்நிலேயில் இவ்வுலகில் இருக்கும் இன்பம் என்? என்று அரவுக்கு அமுதமானுயோ? ஐயகோ! ஏன் அவ்வாறு நினேத்தாய்! உன் பாட்டனுகிய எந்தையின் இருப்பு உன் உணர்வில் உதிக்க வில்லேயா? பலவளம் படைத்துப் பரந்த அயோத்திக்கு அரசனுகும் பதம் உனக்கு ஏற்படா விடினும்; காராளர் ஏர்கள் கடலோசையாய் ஒலிக்கும் கன்னேசி நாட்டினேக் காவல் செய்பவர் ஆர்? நீ அன்றோ ஆள்வாய்! இச்செய்தி உனக்கு இயம்பாது ஏனே மறந்தேன்!

"நல்லோர்வ குத்த முறையாம் அறங்கள்
நாலெட் டில்ஒன்று குறையேம்!
இல்லோ ரைஅற்பம் இகழோம்! இறுக்கும்
இறைஅன் றிஏற உகவேம்
சொல்லோ மறுத்தும் உரையோம்! உரைத்த
துறவோர் கள்புத்தி கடவேம்
எல்லோர் தமக்கும் இனிதே விளேப்பம்
ஏதா கவந்த திதுவே."

"மறைநீ திஉற்ற புறநா டழித்து
வருசே ஊனஆள்வ தறியேம்!
அறைநீ திமுற்றும் உணரா அமைச்சை
அணிவா யில்வைத்தும் அறியேம்!
குறையே இழைத்து வினையே விளைத்த
குடிவைத் திருந்தும் அறியேம்!
இறையே! தவத்தின் விளைவே! எமக்கும்
இதுவோ விதித்த விதியே!"

ஆ! மகனே! உற்றநெஞ்சும், பெற்ற வயிறும் பெருங் கனலாயிற்றே! ஓ! கொடிய அரவே! உனக்கு நாங்கள் செய்த குற்றம் யாது? கௌசிகனும் நீயும் ஒரு கொள்கையினரோ? அவருக்கும் நாங்கள் என்ன தீமை இழைத்தோம்! அறக்கடவுளே! ஈதென்ன கொடுவினை! மன்னர் மணி மார்பில் விளையாடும் மணியே! முன்னாள் எம்முன் எழுந்த காட்டுத்தீயில் விழ எம்மிலும் முன் நடந்த மதலாய்! செந்நாய் திரண்ட செறிகானில் தெளியாது திகைத்திரங்கும் என்னை அன்னாய்! வருந்தலை! என்று நீ எழுந்து கூறுவிடின் உன் அறிவின் திறம் என்ன? "நான் அரவால் இறக்க, இதனைக் கண்டு இறவா திருக்கும் இப்பாவியினிடம் என்ன உரை! என்ன உறவு!! என்று இருக்கின்றாயா? நித்தனை, நிமலனை, நீலமிடற்றனை, நினைந்து நினைந்து வழுத்த; அவன் அருளால் உதித்த அமுதே! அடியேன் இடி யேறுண்ட மரம்போல் மண்ணில் வருந்துதல் அழகோ? ஓ! என் நாயகரே! நீர் எங்குள்ளீர்! நம் செல்வன் சின அரவால் இறந்த செய்தி அறிந்தீரோ? ஆ! நீர் எவ்வாறு அறிய முடியும் அறத் தெய்வமும் உமக்கு அறிவிக்க வில்லையா? வான் கலந்த வளர் காற்றே! நீயாவது இதனை இயம்பக் கூடாதா? ஏ! நமனே! என் என்னுயிரை உரிமையாக்க இன்னும் அஞ்சுகின்றனை! இஃதோ உனது நடுநிலை! இல்லை! இல்லை!!" என்று மூர்ச்சித்து வீழ்ந்தனர். சிறிது தெளிந்து மகனைத் தன்கைகளால் வாரித் தோளில் ஏற்றி அவ்விருண்ட கானில் கடிது நடந்தனர். நரிகள் பின் தொடர்ந்தன; கழுகுகள் மோதின; முட்களில் அவர் துகிலும் கூந்தலும் சிக்கின; உடம்பெங்கும் கீறி உதிரம் செறிந்தது, இவ்விதம் இன்னலுற்றுச் சுடு காட்டையும் அண்மினர்.

## சுடுகாட்டில் சந்திரமதியார்:

புலால் நாற்றமும், செந்நாய்களின் செருவும், நரிகளின் ஊளை யரவமும், கூகையின் குமுறலும், நெருப்புப்பொறிகளின் கூட்டமும், புகையின் ஈட்டமும், சுடுகாடு என்பதைத் தெளிவாகச் சந்திரமதி யாருக்குத் தெரிவித்தன. ஆங்குத் தன்மகனைக் கடவுளர் காவலில் வைத்துவிட்டுப், பலதிசையிலும் கிடந்த கரிந்த குறைக் கட்டைகளை விரைவில் எடுத்துத் தீ மூட்டி அதன்மேல் உயிரனைய மகனைக் கிடத்தினர். தீ மூண்டெரியத் தொடங்கிற்று. அந்தச் சுடலையைக் காவல் செய்யும் சத்திய சீலராகிய அரிச்சந்திரர் அதனைக் கண்ணுற்றனர். தனக்கு அறிவியாமல் பிணஞ் சுடுபவர் யார்? என்றறிய விரைந்தெழுந்து சென்றனர். தனிமையாகத் தகனஞ் செய்து தவித்துக் கொண்டிருந்த சந்திரமதியாரைக் கண்டதும், ஆற்றொணாச் சினம் எழுந்தது, "ஏடி! வாய்க்கரிசி எங்கே? கொள்ளிப் பணம் எங்கே? முழத்துணி எங்கே? இவையெல்லாங் கொடாது, என்ன கொடுவினை செய்தாய்? என்னே உன் துணிச்சல்!" என்று கடிந்து உறுக்கிச் சிதையை உதைத்தார். ஈமம் சிதறுண்டு பிணம் விழுந்தது.

தன் மகவு வீசியெறியப் பட்டதைக் கண்ட சந்திரமதியாரின் உள்ளமும் உயிருங் கலங்கின. பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோலத் தவித்தார் அன்னையார்; புலையனுன புரவலனின் புனித அடிகளைப் புல்லினர். "ஐய! இவ்வூர் வழக்கறியேன் அருவினையேன்; எனக்கு உற்றார் உறவினர் எவரும் இல்லை; யான் ஒரு பொருளுமில்லாத பரம ஏழை; பொருள் இருப்பின் பாதியிருளில் பறையின்றி வருவேனோ! குறைக்கட்டைகளைக் குவித்து எரி மூட்டுவேனோ? என் போன்ற பாவி இவ்வுலகில் வேறுயாவருளர்! தெருள் உடையாய்! அரு ளுடையாய்!! பாவி ஈன்ற இப்பாலகனை அனல்மூட்ட அருள் செய்க!" என்று இறைஞ்சி நின்றனர்.

அரிச்சந்திரர் மனம் இளகிற்று, அவர் இன்னது செய்வதென்று அறியாது திகைத்தனர். "மாதர் மணியே! விடு விடு! யான் புலையன் அல்லேன்; புலையனுக்கு அடிமையான புல்லன் யான். என்னைப் புகலிடமாகக் கொள்வதில் புண்ணியமின்று! என் தலைவர்க்கு உரித்தான காற்பணமும் முழத்துண்டும் அளித்து; எனக்குரித்தான வாய்க்கரிசியை அளிக்காது விடுவாய்! இதுவே இதுபோது செய்யத்

தக்கது!" எனப் பகர்ந்தனர். "அந்தோ! யான் யாது செய்வேன்? துஞ்சிய மைந்தனைத் தோள்மீது சுமந்து, பஞ்சுபடும் பாடுபடும் பாவியேற்குப் பணம் ஏது? கொள்ளித்துணி ஏது?" என்று ஏங்கிப் புலம்பினர். அவ்வமயம் அரசியார் கழுத்தில் அமைந்த 'மங்கல நாண்' அரசருக்குப் புலப்பட்டது. ஆகவே அரிச் சந்திரருக்குச் சந்திரமதியாரின் சாலவித்தை எல்லாம் புரிந்தது; ஆத்திரம் மிகுந்தது; "அடி! நீ நல்லவள்! மிகவும் நல்லவள்!! உன்னைவிட மகா சாலக்காரியை இன்னும் நான் கண்டிலேன்! "செம்பொன் மங்கல நாண் உன் கழுத்தில் இருக்க, "ஏதும் இல்லை! ஆருமிலி!! என்றறைதல் சற்றும் ஏலாது; அதை இதற்கீடாக வைத்துவிட்டுப் பிணஞ் சுடு" என்றனர்.

கனவிலும் நினையா இம்மொழிகள் சந்திரமதியார் மனத்தை வாள்கொண்டு அறுத்தன. இடியோசை கேட்ட நாகம்போல் நடு நடுங்கி, வேடர் வலைப்பட்ட மான்போல் பதைபதைத்துப் பதறி, மலைமேல் மயில் வீழ்ந்தாற்போல் மைந்தன்மேல் மறுகி விழுந்தனர். ஓ! இறைவா! இதுவா உன் அருளாட்சி! மனக்கலக்கம் அற்ற மன்னர் அரிச்சந்திரருக்கு அன்றி, மற்று யார்க்கும் புலனாகாத மங்கலம், இப்புலையன் கண்களுக்கும் இலங்கியதே! ஏ! நீதியே! உன் அநீதி இருந்தவாறு என்னே! என் தெய்விகம் திரிந்ததோ? ஈதும் கொசிகன் சூதோ? அயனும் அரனும் அடிபணிய வைக்கும் சூழ்ச்சி வன்மை கோசிகனுக்கு உரியதோ? என் தலைவர் என்னைப் பிறருக்கு விலைப்படுத்தியதால் என் பொற்புப் போம்; பொறையும் போம்: ஆனல் கற்பும் நீங்குமா? என் மனம் அறியப் பிழை ஒன்றும் இழைத்திலேன்; பனிமதிச் சடையன் பகர்ந்த வாசகம் பழுது பட்டதே' உலக வஞ்சம் ஈதோ!" என எல்லையிலாது ஏக்கமுற்றனர்.

## மறை வெளிப்பட மன்னவர் வருந்தல்:

அன்னையார் அறைந்து அலறிய அம்மொழிகள் அத்தனையும் அகங்கொளக் கேட்ட அரிச்சந்திரர், இறந்தவன் தன் மகன் என்பதையும், அழுதவள் தன் மனைவி என்பதையும் ஆராய்ந்து துணிந்து, "கள்ளவேகத்து அரவு கடித்து என் கான்முளையா இறந்தான்?" என்று அகம் அழிந்து; உயிர்த்து உயிர்த்துத் தன் கருத்தை வெளியே விளம்பாதவராய், சொல்சோர்ந்து மயங்கினர். பின் தெளிந்து தன் காதலியின் கொடுந்துயர் கண்டு மனந்

தீயிலிட்ட மெழுகுபோல் உருகினர். முன்னுளேய நினைவுகள் யாவும் ஒன்றன்பின் ஒன்ருய் அவருக்கு முடுகித் தோன்றின. இளவரசனை தன்மகனேக் கண்டு கதறினர், "ஆ! ஏந்தலே! தாயில்லாது தனியே தருப்பையைக் கொய்ய, அரவு தாவிப் பாய்ந்து கடிக்கும்போது, அன்னையையும் உன்னையும் விற்ற என்னை எங்ஙனம் நோந்தனே! ஒன்றிலும் ஒன்ருத உயிரினை ஓம்பியே புலையனுக்கு ஆட்பட்டான் என் அப்பன்; அவ்வடிமையை அழித்து, எம் அடிமையையும் மீட்க வருவனே? வாரான்! வாரான்!! என்று இறந்தனையோ? விற்ற நாளில் என் மேனி தழீஇ அழுத போது, வேதியன் வேகமாய்ப் பற்றி இழுத்ததைத் தடாத அப்பனும் அப்பனு? என்று அழிந்தாயோ? ஆ! அருமணி! கனகமுடி சூடிக் காலம் கழிக்க வேண்டிய நான், காவியுடை உடுத்துக் காட்டிற் காலங் கழிப்ப திலும் இறப்பதே இனிது என்று எண்ணினுயா? வாளில் வல்ல மன்னர்கள் வந்து நின் தாளைப் பணிந்து சிறப்போடு சுடலைக்குக் கொண்டுவரத் தக்க பிறப்பை உடைய நீ; உனது தாயின் திருத் தோளிலே சுமக்கப்பட்டுத் தனியாக வர நேர்ந்த தீவினை யாதோ? தேரூர்ந்து தெவ்வர் தேசம் எல்லாம் தோற்கடித்துத், தெரியல் சூடித் திகழும் நீ, ஆ! அந்தோ, அடவி அடைந்து அரவு கடித்து பிண அரிசி உண்ணும் பேயனுகிய என் கால்களால் உதைபட, உந்திய ஊழ்வினைதான் யாது? ஆ! அப்பா! என் புகழின் புகழே! புலைவினையேன் உன்னை அறியாது புழுங்கி உதைத்தேனே! என்று ஏங்கி வீழ்ந்தனர்.

அது கண்டும் கேட்டும் உணர்ந்த அன்னையார் "இவரே என் நாயகர்" என்று தெளிந்தனர். உடனே அவர் கரங்கள் ஐயன் அடிகளை அணைத்துக் கொண்டன. "என் ஆருயிரே! விதித்தது அல்லால் வேறு விளையுமோ? துன்பம் தனித்து வரும் இயல் புடையதோ? திரண்டு வருதல் அன்ருே அதன் இயல்பு! ஆன்ருேர் இதற்கு அழிவரோ? இடுக்கண் வருங்கால் நகைக்கும் இயல்பு உம்மிடம் இருந்ததே! அஃது இதுபோது எங்கே? புலையருக்கு ஆட்பட்ட புன்மையாற் போனதோ! ஐயனே! என் மெய்கண்டு மேவிய மேலோனே! இதுவரையும் விளைந்த இன்னல் வாய்மையால் வந்தது அன்ருே? வாய்மையைப் புறக்கணித்திருப்பின் இத்தகு விதி நம்மை அணுகி யிருக்குமா? வாய்மை தூயது; அதனுல் அணுகிய இன்னல்களும் இனியன. மண்ணை இழந்ததாலும்; மகனை இழந்ததா லும் மங்கையை இழந்ததாலுமோ மயங்கினீர்! மன்னனே! மறத்தைப்

பூண்டு அறத்தை நினைமின்! அதில் அமர்ந்து அருள்செய்யும் ஆண்டவனை நினைமின்!!" என்றார்.

சந்திரமதியாரின் சால்பு மொழிகளைச் செவியேற்ற செம்மல் மனம் சிறிது தெளிந்தது. இவர் பின் அன்னையாரை நோக்கி, "என் தலைவன் கட்டளைப்படி யான் நடந்து கொள்வதே தகுதி. நீதியின் தகுதியை நிலை நிறுத்தும்போது மனைவியேது? மக்கள் ஏது? ஆதலின் நீ அடிமைப்பட்ட வேதியனைக் கேட்டு நம்மகனைத் தகனம் செய்வதற்கு வேண்டிய பொருளைக் கொணர்க" எனப் பகர்ந்தனர். அந்தப் பிராமணன் அளித்தல் செய்யான் என்பதைச் சந்திரமதியார் உணரினும், போய் முயற்சி செய்யலாம் என்று மகன் உடலை அங்ஙனே விட்டு நகரத்திற்குள் விரைந்து சென்றனர். இவ்வாறு அன்னையார் அகன்றதும், அரிச்சந்திரர் மைந்தன் முகம் நோக்குவர்; அவனை அணைத்து எடுக்க அணுகுவர்; சீ! தந்தை யென்று நாணமில்லாது நாடுகின்றேனே! தனயன் என்று கூறத் தகுதியில்லாது தவிக்கின்றேனே! என்று யானையுண்ட விளங்கனி போன்று இரு கண்களில் இருந்து கண்ணீர் ஆறுய்ப் பெருக அயல் நின்றார், ஆ! என்னே! அரிச்சந்திரர் ஆண்ட நீதி! தன் மகன் தன் மனைவி என்று அறிந்தும், ஒருவரும் இல்லாச் சுடு காட்டில், நரனும் நடுங்கும் நள்ளிருளில் ஒருவரும் நாடார் ஒன்று அறிந்தும், தேவதாசனை அரிச்சந்திரர் அக்கினியில் மூட்டியிருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யாது அன்னையாரைத் திருப்பிவிடும் தெய்வச் செய்கை—அறச்செய்கை யார்தான் ஆற்ற முடியும்? அவர் அன்னையாருக்கு ஆணையிட்ட சொல், அறன் அறிந்து ஆன்றமைத்த சொல்லன்றோ! இச்சொல்லன்றோ ஞாலம் விழைந்து தொழில் கேட்கும் பெற்றியை அளித்தது.

> **"ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க**
> **சான்றோர் பழிக்கும் வினை."**

என்ற திருக்குறளுக்கு எடுத்துக் காட்டு அரிச்சந்திரர் அன்றோ?

## *காசி நகரில் சந்திரமதியார்:*

காசி நகரிடைச் சந்திரமதியார் கடிது செல்லும்போது, "ஆ! இதுமட்டுமா? இன்னும் எத்தனை இன்னல்கள் இதுபோல் வருமோ!"

என்று எண்ணிக்கொண்டு சென்றார். அவ்வாறு எண்ணி முடிவதற்குள் காசிமன்னன்மகனைக் கள்வர் கவர்ந்து அவன் அணிகளைக் களவாடி அப்பிள்ளையின் உயிர்போக்கித் தெருவில் எறிந்து கிடந்ததனைச் சந்திரமதியார் கண்டு, அது தன் மகன் உடலோ என்று ஐயங்கொண்டு கிட்டிச் சென்றனர். இம்மதலை யார்மதலை? ஒருவேளை என்மகனைப் பேயானது பெயர்த்து எறிந்தது கொல்! என அதனை எடுத்தனர். உடனே அரசர்காவலர், அன்னையாரைப் பிடித்தனர். பெருந்தன்மையும் பொறுமையும் பொருந்தாக் காவலர் அன்னையாரை அதட்டியும் அடித்தும் வருத்தினர். அவர்களிற் சிலர் அடித்தாரையும் உதைத்தாரையும் அகலப் போமின்! என்று அகற்றி, இடம் யாது? குலம் யாது? சிறு சேயைக் கொன்ற முறை ஏது? என்று அறிய விரும்பினர்.

சந்திரமதியாருக்குச் சில எண்ணங்கள் அவ் அடியிலும் உதையிலும் எழுந்தன. "யான்செய்த கொடுவினையின் கோரம் இப்பொழுதே வந்துள்ளது! தெய்வ அருள் நமக்கில்லை. "மறம் மடியும் அறம் வெல்லும்" என்பது நம்மாட்டில்லை! இது நிச்சயம். இன்றேல், இறந்த பிள்ளையை இறைவரிடத்தே சுடுகாட்டில் இட்டு வர, இப்பிள்ளை என் கண்களுக்கு எதிர்ப்படுமா? இவர்களோ சழக்கர்கள்! சண்டாளர்கள்! சால்பு என்பது சற்றேனும் இல்லாதவர்கள்! யான் சாற்றும் மெய்யையும் பொய்யாகவே கொள்வர். இவர்களிடம் நிகழ்ந்தது இயம்பிப் பயன் என்? இறந்த இம்மகன் முன் நிற்றலே கொலைக்குப் போதிய சான்றாகும்; பொய்யுரையே இப்போது மெய்யுரையாகப் பொருந்தும் என்று எண்ணிக் காவலர்களே! ஒன்றினிது கேண்மின்! உலகத்தில் உயிர் கொன்று உடல் உண்ணும் அரக்கி யான் என்பது அறியீரோ? என்கையில் இறந்தமகன் இருக்கக் கொன்றதில்லை, என யான் எவ்வாறு கூற முடியும்?" உடனே காவலர்கள் அரசியார் கைகளைக் கட்டி, அப்பிள்ளையையும் அவர் தோளில் ஏற்றி வீதிவழியே நடத்திச் சென்று, அரசன் முன் இட்டு வணங்கினார்கள். அரசன் அன்னையாரை நோக்கியபின், இவளாலே இயைந்த குற்றம் என்ன? எனக்காவலரை வினவினன். அரசன் கட்டளைப்படி பிணம் நிலத்தில் வைக்கப்பட்டது. "இவ்வரக்கி இன்றிரவு உம் அருமைப் புதல்வனைக் கொண்டுபோய் அரசவீதியில் வைத்து உடம்பைப் பிளந்து கொன்றனள். ஆதலின் இவளை உம்மிடம் கொண்டு வந்தோம்" எனக் காவலர் விடையிறுத்தனர். அரசன் சந்திர

மதியாரை விளித்து, "உன்முறையீட்டைத் தெளிவாய் உரைப்பாய்" எனக் கேட்டனன். சந்திரமதியார் தம் தாள்களையே நோக்கிய வண்ணமாய், "காவலரே! இந்தப் பிணத்தைத் தோளில் சுமந்து வந்ததை நோக்கினீர்! என்னுடலில் வீசும் புலால் நாற்றத்தையும் உணர்ந்தீர்; இனி என்னை அரக்கி எனத் தீர்மானிப்பதற்கு ஐயம் யாது? யான் மக்கள் தசையை மனங்குளிர உண்ணும் கொடியார்களில் ஒருத்தி; என் உடல் நரமாமிசத்தாலேயே வளர்ந்தது; இன்றிரவு உம் இளமகன் தசையை விரும்பி இக் கொலையை மேற்கொண்டேன்" என்றனர்.

அரசன் கண்ணுகிய அளவுகோல் அன்னையரின் பண்புகளைத் தெளிய அளந்து பகர்ந்தது. அவன் மனம் அரசியாரை இத்தன்மைத்தென ஒருவாறு வரையறுத்தது. ஆகவே அரசன் அமைச்சரை நோக்கி, "இப்பெண்ணின் அடக்கமும் ஒடுக்கமும் அரக்கி அல்லள் என்பதையும்; பிறர்செய்த இடர்பலவற்ருல் இளைத்து நமக்கு இவ் வார்த்தைகளைச் சுடச்சுட உரைக்கின்ருள் என்பதையும் உணர்த்துகின்றன. இவ் அம்மையின் முகக்குறி கொலைக்குறியைக் குறித்திலது. ஆதலின் இம்மங்கையை ஐயுறற்கு என்மனம் இசைந்திலது" என இயம்பினன்.

அக்காவலர் அரசனை வணங்கி, "மன்னு! இவள் பிள்ளையை எடுத்துச் சென்ற அடியினை ஒற்றிப் பின்சென்று நாங்கள் இவளைப் பிடித்தோம். ஆதலின் இவளே கொன்றவள்" என வற்புறுத்தினர். அதுவும் அரசர் அகத்திற்கு இசைவை அளித்திலது. அதனுல் மன்னன் "பிள்ளையைக் கொண்டு சென்ற வழியில் இப்பெண்ணின் காலடி மட்டுமா உண்டு? ஆய்மின்" என ஏவலர்களை ஏவினுன். இதை உணர்ந்த கௌசிகன் விரைந்து ஏவலர் ஏகி ஆராய்வதன் முன் அன்னையார் அடிகளைத் தவிர மற்றனைத்தையும் அழித்து விட்டான். முனிவன் கொடுமை அங்குங் குடிகொண்டது. சென்ற ஏவலர்க்கு அன்னையின் அடிகள் தவிர வேருென்றும் புலனுக வில்லை. அச்செய்தியை அறிந்த அரசன் அகம் மிக நைந்தது. அந்தோ, என் செய்வது? பழவினைத் தொடர்பு இவளை வந்து பற்றியது போலும்! அதை எம்மால் அறிய முடியவில்லை எனத் தன்மகன் இழப்பிலும் சந்திரமதியார் சால்பிழப்பை அரசன் எண்ணி எண்ணி ஏக்கங் கொண்டான். வேறுவழி யின்மையால் அம்மையாரைக் கொலைபுரிய ஆணையிட்டான்.

சத்தியத்தின் தூதாய் நின்ற சந்திரமதியாரின் பாவம் ஒழிவது போல் இருளும் நீங்கியது. தன்குலப் பெண்ணின் தாழ்நிலை கண்டு தாங்காதவன்போலச் சந்திரன் மறைந்தான். தன்குல மைந்தன் தேவதாசன் நிலை கண்டு ஆற்றுச் சீற்றந்தான்போல் ஆதித்தன் கீழ்த்திசை எழுந்தான். சந்திரமதியாரைக் கொலைபுரியப் புலையனுகிய வீரவாகுவிடம் காவலர் ஒப்புவித்தனர்.

## மயானத்தில் எழுந்த மாபெருங் காட்சி.

### கத்திபெற்ற காவலனின் கடுஞ்சோதனை:

**வீ**ரவாகு சந்திரமதியாரைச் சேரிக்கு அழைத்துச் சென்று தன்கையிலிருந்த கத்தியை அரிச்சந்திரர் கையிற் கொடுத்து அன்னையாரை வெட்டி வீழ்த்துமாறு அவருக்குக் கட்டளை யிட்டான்.

கத்தியுங் கையுமாகக் காவலர் சந்திரமதியாரைச் சாலைவழியே நடத்திச் சென்றனர். இருவரும் ஒருவரை ஒருவர் இதயம் புக்கு அறிந்து கொண்டனர். ஆ! செம்பொருளே! இது உமக்குச் சித்தமா? உன் சத்தியத்தில் அடியேன் ஊறு விளைத்தேன்போலும்! அதற்கேற்ற தண்டனை இதுவா? என்று முகவாட்டமும் மனக் கோட்டமும் கொண்டார் அரசர். இதை உணர்ந்த சந்திரமதியார் என் தலைவரே! இதற்குச் சிறிதும் இதயம் மடியலாகாது. "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்பதை அறியீரோ! உம்முன்னோர் வீரத்தையும் அறத்தையும் நெஞ்சில் இருத்துவீராக! நீதி வழங்கிய நின் கை இன்று நிந்தைபடின் அந்நீதிகள் எல்லாம் உன்னை நிந்திக்கும்! நிந்தனையுடன் நிலத்தில் நிலைப்பதிலும் பார்க்க, நீதியோடு இந்நிலத்தை நீத்தல் இனிதன்றோ! சத்தியமே கடவுள், நாம் அச்சத்தியத்தின் ஆணைவழி நடப்போமாயின் சத்தியம் நம்மைக் காக்கும்" என்றனர். அக்காலையில் சத்திய கீர்த்தி "அரசே!" என்று அடிபணிந்து நின்றான். அரசரும் நிகழ்ந்த செய்திகளை

நைந்து நைந்து நவின்றார். அமைச்சனும் அனைத்தையும் அறிந்து அகம் அழிந்து நின்றான். பின் அரசரும் அமைச்சரும் அரசியாருடன் கொலைக்களம் செல்வதை நகரமாந்தர் கண்டார்கள். வழியிற் கண்டோர் பலப்பல பேசத் தொடங்கினர்.

"ஆ! இவளா கொலைக்காரி! இல்லை! இவள் கற்புக்கடம் பூண்டவள்; கொலைக்குறி ஒன்றேனும் இவள் முகத்தில் இல்லையே! எப்படி இவள் கொலைக்காரியாவாள்? முகமோ முழுமதி; கைகளோ செங்காந்தள்; கண்களோ கடைந்தெடுத்த கைவேல்; மெய்யோ மயிற்சாயல்; இடையோ நுடங்குங் கொடி; கூந்தலோ கருமேகம்; அந்தோ! சொல்லுவார் சொல்லினும் கேட்பார்க்கு மதியென்னே!" நமது கருணைவேந்தர் இப்பெண்ணைக் கண்ணுற்று கண்டனரோ? இது பெண்பழியாய் முடியுமே! இப்பழி அவன் முடியை வீழ்த்தி சடையைப் பூட்டி காடேகச் செய்யுமே! ஓ! தெய்வமே உனக்கு அருளில்லையா!" என்று சிலர் அறைந்தனர்,

"இல்லை! இல்லை!! இவள் இராக்கதி! இவள் பிணம்தின்னும் பித்திதான், எத்தனை உயிர்கள் இவளால் மாண்டனவோ? அசடி! பழிபூணி! நாம் எல்லாம் இவளுக்கு எம்மாத்திரம்? இவள் கண்ணைப் பாருங்கள். இக்கண்ணாலே வெருட்டி நம்மை வெட்டிக் கொலை புரிவாள்" என்றனர் சிலர், இன்னுஞ் சிலர் "அந்தோ! இவளை ஒருவன் ஒருநாள் சாலைவழியே விலைசாற்றக் கண்டோம். இதுபோது அழைத்துச் செல்பவனும் அவனேபோலும்! இவனின் செம்மையையும், சீல மார்பையும், உயர் தோள்களையும், கண்டால் மாலொப்பான் என்பர்; மயிலோன் ஒப்பான் என்பர்!! இல்லை இல்லை! மதன் ஒருவனே ஒப்பான் என்பர்! இத்தகைய இனியானுக்கு வந்த இடுக்கண் யாது? இவள் இங்கு வந்த காரணம் யாது? இத்தீவினை வந்து சார இவள் செய்த கன்மம் யாதோ? இவ்வின்னலினும் இவள் முகம் இரவிபோல் இருக்கின்றதே! இவள் யார் மகளோ? எந்த ஏந்தலின் இல்லக் கிழத்தியோ? இவள் எங்கேயோ பிறந்து; எங்கேயோ வளர்ந்து; இங்கேயோ இறப்பதற்கு வந்தாள்! உத்தம மகளிரும் உழலும் காலம் வந்ததோ! இக்கற்புத் தெய்வத்தின் மனஎரிவு இம் மண்ணுலகை மாய்க்காது விடுமா?" என்றனர். உலகம் பலவிதம் என்பது இதனால் நன்கு வெளிப்படுகின்றது. நன்மையோ தீமையோ அவரவர்கள் மனப்

பண்புக் கேற்றவாறு பேசுதல் உலகவழக்கு. தீயசார்பினர் தீமையையும், தூயசார்பினர் நன்மையையும் புகறல் கண்கூடு.

## அருந்தவன் நாணமும், அரசரின் ஆண்மையும்:

அரிச்சந்திரர் இடக்கையில் சந்திரமதியாரைக் கட்டிய கயிற்றையும் வலக்கையில் பிணஞ்சுடும் கழியையும் பிடித்துப் புறநகர் அணைந்தனர். அவர் தேகம் தள்ளாடிற்று; அகம் எரிந்தது; முகம் கரிந்தது; "நெஞ்சே! என்ன பாதகம் செய்தனம்" என்று வாய் நகைத்தது. அவனியில் ஆருமே அடையாத அண்ணலின் திண்மையும் அரசியாரின் பெண்மையும் காண வசிட்டர், இந்திரன், நாரதர் முதலியோரும் வானவரும் இனி நடைபெறும் செயல்களைக் காண வானத்திற் குழுமினர்.

அந்த வேளையில் கௌசிகன் விரைந்து வந்து," அரசே! இந்த நோதக வெய்தல் ஏன்? "நீ எனக்கு முன்னம் தந்தநாடு யான் தந்திலேன்" என்று ஒருவார்த்தை உரைத்தால் போதுமே! இம்மொழி ஒன்றால் நீர் இறந்தமகனும் இழந்த நாடும் இனிது பெற்று இருப்பீர்" என்றான். வீரமன்னரும் மங்கையும் முனிவர் மலரடிபணிந்து, "சாமீ! இன்றிருந்து நாளை அழியும் உடல் நலத்திற்காகவா வாய்மை தவறுவது? இதுகாறும் நம்மை அணைந்த இன்னல்கள் போதும்! இதைவிட, வீறுகொண்ட விதியின் செயல் வேறு உண்டோ? இல்லை! இல்லை!! வாய்மையே உயிருக்கு உறுதுணை. கத்தி கொண்டு காதலியின் கழுத்தறுக்கும் காதகனாயினும் இத்துணையை விடேன்! விடேன்! நீர் நோய்மை செய்யினும் வாய்மை நோற்றலில் இம்மியும் வளைபடேன்! புலையனும் விரும்பாத இப் புலால் உடம்பை நாம் யாதுக்கு விரும்பவேண்டும். விழுப்பம் தரும் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் "ஒண்மையை யாம் நன்கறிவோம்; கலையுணர்ந்த நீ இதைக் கழறுவதழகோ? வாய்மை காப்பவர் நரகம் புகுவர் என்று நன்னூல் இயம்பினும், நாம் வாய்மையையே காமுறுவோம். பதி இழந்தோம்; பாலனை இழந்தோம்; படைத்த நிதி இழந்தோம்; இதுபோது இல்வாழ்வின் துணையையும் இழக்கப்போகின்றோம்! இதையும் விட இவ்வுலகில் என்ன இருக்கப் போகிறது! ஆம்! ஒன்று உண்டு; அதுதான் வீடுபேறு; முனிவரே! வேண்டுமானால் அதையும் இழக்க

ஆணையிட்டு நிற்கின்றேம்!!" என்று உரைத்தனர். முனிவனும் மதியிழந்து, தன்வாய் இழந்து, நாணத்தோடு வானவருடன் சேர்ந்தார். அண்ணல் அரிச்சந்திரர் அறைந்த ஆண்மை உரை, சாவின் வாயிலைச் சார்ந்த சந்திரமதியாரைச் சாந்தியில் ஆழ்த்தியது. அன்னையாருடன் அரிச்சந்திரர் பேசப் பெருதவரரய்ப் பிணஞ்சுடுங் கோலினுலே தள்ளிச் சுடுகாட்டை அடைந்தார்.

### வாய்மையின் வெற்றியும், வானவர் வாழ்த்தும்:

காடு அடைந்த காவலன் தன் காதலிக்கு "வழக்கப்படி, நீ வழிபடும் தெய்வத்தை வணங்கிக் கிழக்கு நோக்கி இரு" என்று கட்டளையிட்டான். கிளிமொழியாரும் அங்ஙனமே கணவனைப் பரவி அமைந்தார். அப்போது அவர் முகம் அன்றலர்ந்த செந் தாமரையையும் பழித்து நின்றது. குமுதவாய் குறுநகையை அரும்பிற்று. தன் கழுத்தில் வாள் இதோ பதியும்! பதியும்!! என்று தலைகுனிந்த சந்திரமதியாருக்கு வாள் பதிதலில் தாமதம் ஆனதும், அகத்தில் மன்னர் நிலை குலைகின்ருர் போலும் என்று ஓர் அசைவு பிறந்தது. உடனே தலையை நிமிர்த்தித் தலைவனுரைப் பார்த்தார். அரசர் ஓங்கிய கையில் ஒளிவிடு கத்தியோடும் கலங்கிய கண்ணீர் நிறைந்த கண்களோடும் நின்ற நீர்மை கண்டு, "அரசே! இதுபோது நீர் வெட்டுவது உடலையா? உயிரையா? உடல் நிலையற்றது! உயிரோ! ஒருவராலும் வெட்டுவதற்கும் கட்டுவதற்கும் உரிய பொருளன்று. அது பரம்பொருள் போன்றது; பளிங்கனைய சித்தாய் நிற்பது. இவ்வுயிர் இன்னும் எத்தனை உடலை எடுத்து உழலப் போகின்றது. மண்ணின் மாயையில் அடிபட்டவர்களுக்கு மரணத்தை விட நட்பு வேறு யாதுளது! இது நல்ல சமயம்! சத்தும் சித்தும் சாரும் சமயம் இதுதான். என் நாதா! அடியாள் ஆண்டவனுய் வணங்கும் உம் உயர் கரத்தால் எனக்கு முடிவு ஏற்படின், அதைக் காட்டிலும் வீட்டின்பம் பெரிதாகுமோ? யான் செய்த தவமே தவம்! என்னைப் போன்ற ஏழில் உடையர் ஏழுலகில் எவர்? ஐய! தவத்தையும் தானத்தையும் தாங்காது கைவிடுதல் தக்கதோ? எம் ஒழுக்கத்தின் விழுப்பம் இதோ எழுகின்றது! இவ் எழுச்சியில் நீர் வீழ்ச்சியுறின் இவ்வையகம் என்ன இயம்பும்?" என்று சந்திரமதியார் ஆண்மை வளர்த்தார்! அண்ணலும் ஆட்பட்டு

"உலகு யிர்க்கெலாம் பசுபதி ஒருமுதல் ஆயின்
அலகில் சீருடை அவன்மொழி மறையெனின், அதன்கண
இலக றம்பல வற்றினும் வாய்மைஈ டிலதேல்
விலகு ருமல்அவ் வாய்மையை விரதமாக் கொளின்யான்

"நெறியின் அன்னஎன் றனைவிடா நிறைஇவட் குளதேல்
இறுதி இன்மையைப் பெறுகஇல் வெனின்இவள் இறுதி
பெறுக........."

என்று வாள் வீசினர், மேற்கூறியவை யாவும் சத்திய மாதலின், அவ்வாள் மாறி மறுமணத்தில் இட்ட மாலை எனச் சந்திரமதியார் கழுத்தை அலங்கரித்தது. அலைகடலில் எழுந்த அமுதம்போல் அரசியார் பொலிந்தார். அரசரும் சாணையினல் கடையப்பட்ட செழுமணிபோல விளங்கினர். தன் கணவன் சத்தியத்தைக் காக்கும் பொருட்டுத் தன் உயிரை இழக்க உறுதி கொண்டு நின்ற இவளைக் காட்டிலும் இனியாள் யார்? வீரர்யார்? முனிவரும் வீரரும் இவள்முன் நிற்க முடியுமா? பொன்னணி களைந்து, மணிமுடி துறந்து, அரியணை அகன்று நின்ற அரிச்சந்திரருக்கு இவ்வுலகில் இதை விட இன்பப் பேறு வேறெது உண்டு? ஆ! ஆ! ஈதென்ன அருமை! பெருமை!! வானம் மலர் மழை பெய்தது! தேவர்கள் இன்ப வீறினல் கீழே இறங்கினர்கள். யானே இவ் அரிச்சந்திரர் தூய்மையையும் குணத்தையும் உலகறியச் செய்தவன்; என்மனமே இவன் நலத்தில் நாடி நின்றது, என்னைப்போல் நன்றி இவர்க்கு யார் செய்தார் என்று நாணத்தின் மீது கௌசிகன் நடனம் ஆடினன். வசிட்டரின் உள்ளமும் உடலும் பூரித்தன. இறைவன் அருளால் மாண்ட இரு குழந்தைகளும் உயிர்பெற்று எழுந்தன. காசிராசனும் அரிச்சந்திரரும் தத்தம் மகவைக்கண்டு இறும்பூது அடைந்தார்கள்.

## ஆண்டவன் ஆணையும், அரசர் ஆட்சியும்:

மும்மூர்த்திகளும் அரிச்சந்திரரைப் பார்த்து "மன்னர் மன்ன! இதுவரையில் உலகில் உதித்த உத்தமர் எவருள்ளும் முறைமைக்கும் நெறிக்கும் உன்னை ஒப்பவர் இலர் என்றூர்கள். உடனே அரசரும் அரசியும் அமைச்சரும் அகம் உருகிப் பன்முறை விழுந்தெழுந்து

ஆதித்தனர். கௌசிகனும் அனைவரையும் நோக்கி, "இந்தக் கோதிலாக் குணத்தோன் நீதியும் நெறியும் அறியாது அருந்தவர் அவையில் இகழ்ந்தேன்; இதனால் வசிட்டனே வென்றான்; நான் தோற்றேன்! ஆதலால் என்தவத்தின் பாதியைக் காவலனுக்கு யான் அளிக்கின்றேன். அதுவும் அல்லாது எனக்கீந்த பேரரசும் ஈகின்றேன்" என்று உரைத்தனன். இவ்வுரை கேட்ட அரசர் தீக்கோல் கொண்டு செவியில் ஏற்றினாற்போல் நொந்து, வஞ்சகர் தாமும் வழங்கியதை வாங்கக் கண்டிலேன் — கேட்டிலேன்! கைநீட்டி இரந்தோர்க்களித்த பொருளைப் பெற்றான் இவன் எனப் புகழ் படைத்த உலகம் பேச நான் நாடாளுவேனா? உமிக்குத்திக் கைவருந்தும் ஊமத்தர்போல் நான் உழல்வேனா? இப்பழி நான் ஒரு காலமும் பூண்கிலேன்! இம்மையில் பழியும் மறுமையில் நரகமும் தரும் இச்செய்கையை நான் செய்யேன்! பெருந்தகையாளர் எவரேனும் கேட்பாராயின் எள்ளிப் பெரிதும் நகையாடுவரே! முனிவரே! இதற்கு முன் தீரா இடர் விளைத்தும் போதாமல் மும்மையும் பழிதரும் பண்பை யுடையதுமான அரசை இன்னும் சூழுதல் தகுமோ?" என்றார். முனிவன், "வள்ளல் கேள்! நான் தவத்தை விட்டு நின் நாடும் நகரும் கருதி மீண்டும் மன்னனாக முடியுமா? வசிட்டருக்கு நான் முன் மொழிந்த வஞ்சினத்தால் உன்னைப் பலபட வருத்தினேன். அதில் தோற்றேன்; நின் நகரை நீயே ஆள்" என்றான். உடனே அரிச்சந்திரர், 'முனிவரே! என் மனைவியையும் மைந்தனையும் மறையோனுக்கு அடிமையாக்கி விற்றேன்; நானோ சாதியிற் கீழாம் புலையனுக்கு அடிமையாய்ச் சுடுகாடு காத்தேன்! இத்தகைய நீர்மை உடைய நான் நாணிலாது நகரடைந்து முடிசூடி மண்புரக்க ஏகுவேனோ? உனக்குரியது நாட்டாட்சியே! எனக்குரியது காட்டாட்சியே" என்றார்.

உடனே, அக்கினிதேவன் தோன்றி, "அரசே! என்ன உரைத்தாய்! எனக்கு நீர் விற்றதுவும் இகழ்ச்சியோ? நான் இவர்களை விலை கொள்வதற்காக வேதியர் குலத்தில் வந்து உதித்த பின் இவர்களை விலைகொண்டு கொடுத்த ஆவணம் ஈது" என்று அன்னைபங்காளன் முன் வைத்தான். அரசரும் அதிசயம் உற்றார். அப்போது இயமன் தோன்றி, "மன்னனே! உன்னைப் புலையனாய் வந்து ஆட்கொண்டவன் யான்; நீ எழுதித் தந்த ஆவணம் இதோ இருக்கிறது; நீ இருந்து காத்த சுடுகாடும் யாகசாலையாகும்; இதனைப்

பெரிய வடுவாக உணரின் அதோ! நீ இருந்த சுடலையைப் பார்" என்றான்.

அப்போது சிவபெருமான் அவ்வரிச்சந்திரனை நோக்கித் திருவுளம் மகிழ்ந்து, "அரச! நீ அயோத்தி அடைந்து தீங்கற மகுடம் சூடி, இம்முனிவன் செய்த தவத்தின் பாதியையுங் கொண்டு, உலகம் பொது நீங்கப் புரந்து ஆள்வாய் என்று கூறினார். பின் இந்திரனை நோக்கி, "நீயும், காசிராசனும், முனிவர்களும் அயோத்தி அரசருடன் போய் சுடர்முடி சூட்டிப் பின் உங்கள் ஊர்களுக்குச் செல்மின்! என்று கூறிக் கயிலை புக்கார். செங்கண்மால் பாற்கடல் புகுந்தார். திசைமுகனும் தனதுஉலகடைந்தார், அரிச்சந்திரர் முதலியோர் அவ்விடத்தை விட்டு அயோத்தி அடைந்தனர்.

கௌசிகர் அரிச்சந்திரரை அழைத்து வருகின்றார் என்று கேள்வியுற்றுப் பள்ளம் நோக்கும் மேட்டு வெள்ளம் போல் உள்ளம் மகிழ, உரோமம் சிலிர்க்கச் சேனைவீரரும் அரசர்களும் எதிர் கொண்டனர். ஆரண முழக்கத்தோடு அயோத்தியின் மணிப்பீடத்தில் அரிச்சந்திரரையும் அன்னையாரையும் ஏற்றிப் பொன்முடி சூட்டி வாழ்த்திப் புரந்தரன் போனான், மற்றையோர்களும் போனார்கள். கௌசிகனும் தவத்தின் பாதியைத் தாரை வார்த்து அளித்தான். அரசரும் அரசியாரும் குமரனுடனும் அமைச்சருடனும் இனிது இருந்து ஆட்சி புரிந்தார். என்னே "மயானத்தில் எழுந்த மாபெருங் காட்சி."